


இதழ்:02 யூன்:2015 விலை:70.00



அனைத்து வகையான அச்சு வேலைகளுக்கும்...



# SHATHYA Printers

# சத்தியா பிறிண்டேர்ஸ்

பாடப் புத்தகங்கள்
பாடசாலைச் சஞ்சிகைகள்
கோவில் நோட்டிஸ்கள்
விளம்பர பதாதைகள்
திருமண அழைப்பிதழ்கள்
லேபல்கள்
வியாபாரச் சிட்டைகள்
கவிதைத் தொகுப்புக்கள்
விசிட்டிங் காட்
மணி விழா மலர்கள்
ஸ்ரிக்கர் பிறிண்டிங்
திருமண வாழ்த்துமடல்கள்
பருவகால வெளியீடுகள்
கண்ணீர் அஞ்சலி
நினைவு மலர்கள்
விளையாட்டு நிகழ்வுகளுக்கான போஸ்ரல்கள்
சிறுகதைத் தொகுப்புக்கள்

Books Printing
Bill Books
visiting Cards
Stickers
ID Cards
Wedding Cards
CD lables
Letterheads
Menu Cards
Invitation
Name Boards
Mug Printing
Logo creations
Catalogs
Brochures
Envelopes
CD Covers
Posters
Banners Printing
Calenders

153/11 Navalar Road, Jaffna.

: 021 56 18 619
: 077 13 86 661
:printsathya55
:printsathya55@gmail.com

**ஆசிரியர்**
**எஸ்.பி.லெம்பட் (ஜே.பி)**
பண்ணை முகாமையாளர்

**விற்பனை,விளம்பரம்**
**வே.ப.சுரேஸ்குமார்** *(Dip.in Agri)*
விளம்பர மற்றும் விற்பனை முகாமையாளர்,
உழவன் மாத இதழ்.

**அச்சமைப்பு**
சத்தியா பிறிண்டேர்ஸ்,
*153/11* நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**பக்க வடிவமைப்பு**
யோ.இன்பரூபன்

**முகவரி**
குடமியன்,
வரணி.
யாழ்ப்பாணம்.

**மின்னஞ்சல்**
ulavan15@gmail.com
**தொலைபேசி**
021 3003814
0779721438

**சந்தா விபரம்**
உள்ளூர் தனிப்பிரதி - 70/=
அரையாண்டுச்சந்தா - 420/=
ஆண்டுச் சந்தா - 840/=
வெளியூர் தனிப்பிரதி 10 யூரோ
(தபால் செலவு அடங்கலாக)

**கருத்துக்களும், விமர்சனங்களும் வரவேற்கப்படுகின்றன.**
ஆ-ர்



# எண்ணம்

அன்புக்குரிய உழவப் பெருமக்களே, வாசகர்களே இரண்டு மாத குழந்தையாக வரும் "உழவன்" சில புதிய விடயங்களையும் தாங்கி வருகின்றது. மேலும் கால்நடை வளர்ப்பு, நெற் செய்கை, பழமரச் செய்கை, தென்னை செய்கை, மரக்கறிச் செய்கை உட்பட்ட பனை வளம் , இயற்கை விவசாயம் ,மூலிகை வளர்ப்பு அல்லது பயன்பாடு போன்ற விடயங்களையும் உள்ள டக்கியதாக உழவன் சஞ்சிகை வரவேண்டு மென்பது எமது நோக்கம்.

மாணவர்கள் பயன் படக்கூடியதாக விவசாய விஞ்ஞானப் பாடத்திட்டத்தையும் உழவன் சஞ்சிகையில் இணைத்துக் கொள்ளவும் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்.

விவசாயிகளின் அடிப்படைத் தேவைகள் அவர்களின் நலன்கள், அவர்களின் பிரச் சினைகள் போன்றவற்றை கவனிக்க வேண்டிய பொறுப்புள்ள துறை சார்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் விவசாய அமைப்புக்கள் தமது சேவைகளை விவசாயிகளுக்கு முழுமையாக வழங்க உந்து சக்தியாக உழவன் செயற்படும் என்பதையும் தெளிவு படுத்துகிறோம்.

மேலும் வாசகர்களும் துறை சார்ந்த வல்லனர்களும் எமக்கு அனுப்பும் தத்தமது அனுபவ குறிப்புக்கள் இக்கட்டுரைகள், ஆக்கங்கள் , விமர்சனங்கள் அனைத்தையும் உழவன் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள எட்டு மாவட்டங்களிலுள்ள விவசாயிகளும் பயன்படக் கூடியதாக "உழவன் சஞ்சிகை" விரிவுபடுத்த வேண்டுமென்பது எமது முக்கியமான நோக்கம் என்பதையும் பணிவுடன் கூறி வைக்க விரும்புகிறேன்.

-என்றும் அன்புடன்-
ஆசிரியர்





# தென்னையில் -வைரப்புழு-



கண்ணுக்கு தென்படாத இந்த வைரப்புழுக்கள் தென்னை மரத்தி னடியில் உருவாகி பட்டையூடாக மேல் நோக்கிச் சென்று குருத்துப் பகுதியைத் தாக்குவதுடன் தென் னையின் முடிப்பகுதியை (வட்டு) நலிவடையச் செய்யும். வைரப் புழுவின் தாக்கத்தினால் நிலை குலைந்து போகும் தென்னைகள் குறிப்பிட்ட சில காலத்திற்குள் முடி சரிந்து இறந்துவிடும்.

தென்னை மரங்களில் பட் டையில் ஊரல் போன்ற கசிவு ஏற்பட்டு சிறிய வெடிப்புக்களும் காயங்களும் ஏற்படுவதை அவ தானிக்கலாம். இந்த அடையாளங் கள் வைரப்புழுவின் தாக்கத்தால் ஏற் படுவது.

தென்னை அபிவிருத்தி அதிகாரிகள் இது ஒரு வகை பங்கசு தாக்கம் என்றும் இந்நோயை "தண்டு கசிவு" என்றும் குறிப்பிடுகிறார்கள். இந்நோய் ஏற்பட்ட தென்னை களுக்கு செப்புசல்பேற் 50 கிராம் சுண்ணாம்பு 50 கிராம் எடுத்து தனித்தனியே 1/2 லீற்றர் தண்ணீரில் கலந்து பின் கலக்கப்பட்ட இரண்டு திரவங் களையும் ஒன்று சேர்த்து தண்டு கசிவு ஏற்பட்ட இடங்களில் பூச வேண்டும் அல்லது எரிந்த ஒயிலை பூசலாம் என்றும் அதி காரிகள் குறிப்பிடுகிறார்கள்.

தென்னை அபிவிருத்தி அதிகாரிகள் "தண்டு கசிவு" என்று கூறும் பங்கசு நோயை, பாரம் பரியமாக தென்னைச் செய்கை மேற் கொள்ளும் நம்மவர்கள் குறிப்பாக தென்மராட்சி மக்கள் வைரப் புழுத்தாக்கம் என்று குறிப்பிடு கிறார்கள்.

இந்த வைரப்புழுத் தாக்கத் திலிருந்து தென்னைகளை பாதுகாக்க பாரம்பரியமாக இவர்கள் கையாண்டு வரும் ஒரு முறை பலரை ஆச்சரியப் படுத்தியுள்ளது. படத்தில் காட்டப் பட்டுள்ளது போல வைரப்புழுத் தாக்கம் எவ்வளவு தூரம் சென்றுள் ளதோ அவ்விடத்திற்கு சற்று மேலே 3 அங்குல அகலத்திற்கு தென்னையைச் சுற்றி பட்டையை உளியால் வெட்டி எடுத்து விட்டு, வெட்டப்பட்ட இடத்தில் எரிந்த ஒயிலை பூசிவிடு வதன் மூலம் அவ்விடத்திற்கு மேலே வைரப்புழு செல்வதை தடுத்து விடலாம். இது ஒரு வெற்றிகரமான முறையாகவும் நாம் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

மேற்படி வைரப்புழுவை கட்டுப்படுத்தும் முறையை 7 வருடங் களுக்கு மேற்பட்ட தென்னைகளில் தான் செய்ய முடியும். சிறிய தென்னம் பிள்ளைகளில் வைரப்புழுத்தாக்கம் ஏற்பட்டால் மேற்சொன்ன முறை யை செயற்படுத்த முடியாது.

சிறந்த பராமரிப்புள்ள தென்னந் தோட்டங்களில் தான் மேற்படி நோய்த்தாக்கம் அதிகமாக உள்ளது என்றும் பராமரிக்கப்படாத தோட்டங்களில் அதாவது சிறிய காடுகள் பற்றைகளுடன் கூடிய தென்னைகளுக்கு மேற்படி வைரப் புழுவின் தாக்கம் ஏற்படுவதில்லை என்றும் தோட்ட உரிமையாளர்கள் கூறுகின்றனர்.

# நம் நாட்டு மூலிகை

# நன்னாரி

மெல்லிய நீண்ட இலை களையுடைய கம்பி போன்ற கொடி இனம். இதன் மணமுள்ள வேர்கள் மருத்துவ பயனுடையவை. நன்னாரி நறுக்கு மூலம் என்ற பெயரிலும் அழைக்கப்படுகின்றன. மணல் பாங்கான மேட்டு நிலங்களில் அதிகமாக காணப்படும்.

நமது உடலிலுள்ள வெப் பத்தை அகற்றுவதிலும், வியர்வை சிறுநீர் பெருக்கியாகவும், நோய கற்றி உடல் தேற்றவும், உட லுக்கு உரமூட்டவும் பயன்படும்.

* பச்சை நன்னாரி வேர் 5 கிராம் எடுத்து நன்கு அரைத்து 200 மில்லி பாலில் கலந்து குடித்துவர மூலச் சூடு, நீர்க்கடுப்பு, நீர்ச் சுருக்கு வறட்டு இருமல் குணமாகும்.

* பச்சை வேரை 20 கிராம் எடுத்து சிதைத்து 200 மில்லி தண்ணீரில் ஊறவைத்து வடிகட்டி 100 மில்லி வீதம் காலை மாலை குடித்துவர பித்த நோய்கள், சிறு நஞ்சு நீரழிவு, கிரந்தி, சொறி சிரங்கு, மேக நோய் தீரும். பத்திய மிருக்க வேண்டும்.

* வேரை அரைத்து பற்று போட வீக்கம், மூட்டு, வலி கட்டி, புண் ஆகியவை தீரும்.

* வேர்ச்சூரணம் 1/2 கிராம் காலை மாலை வெண்ணையில் கலந்து சாப்பிட்டு வர ஆரம்ப குஷ்டம் தீரும். அதே அளவு தேனுடன் கலந்து சாப்பிட்டு வர பாண்டு, காமாலை போன்ற நோய்கள் தீரும். இச் சூர ணத்தை அதிகம் உண்டால் பசி வராது.



# நஞ்சில்லாத மரக்கறி

## -கொத்தவரை-



நம் நாட்டில் கொத்தவரைச் செய்கை மட்டக்களப்பு மாவட்டத்திலும் மிகச் சிறிய அளவு வேறு மாவட்டங்களிலும் காணப்படுகின்றது. பலருக்கு கொத்தவரையைத் தெரியாது இந்தியாவுக்கு அகதிகளாக இடம் பெயர்ந்து மீண்டும் தாயகம் திரும்பியவர்களுக்குத்தான் கொத்த வரையையும் தெரியும் அதன் சுவையும் தெரியும் அதனைச் சமைக்கவும் தெரியும் கொத்தவரைக்காய் இந்தியாவின் எல்லா மரக்கறிச் சந்தைகளிலும் குவியலாகக் காணப்படும் .இது மிக மலிவான ஒரு மரக்கறி.

கொடிகாமம் சந்தையில் கொத்தவரைக்காய் கிடைக்கின்றது.இது குடமியன் பண்ணையில் உற்பத்தி செய்யப்படுகின்றது. ஒரு கிலோ 100 ரூபாவிற்கு விற்பனை செய்யப் படுகின்றது.

உரம்,மருந்து வகைகள் பயன் படுத்தாது சேதன பசளைகளை உபயோகித்து உற்பத்தி செய்யப்டும் கொத்த வரையில் நோய்த்தாக்கம் ஏற்படுவதில்லை.

சில வேளைகளில் காய்த்துளைப் புழுக்களோ அல்லது அழுக்கணவன் தாக்கம் இருப்பதால் வெள்ளைப்பூண்டு கரைசலுடன் சிறிது மண்ணெண்ணை கலந்து விசுறுவதன் மூலம் கட்டுப் படுத்தலாம்.

பொரியல்,சுண்டல்,பிரட்டல் மற்றும் வதக்கிக் கறியாக்கி உணவுடன் சேர்க்க மிகவும் சுவையாக இருக்கும் கொத்தவரைக்காயை உப்பில் சேர்த்து மோருடன் அவித்து கொத்தவரங்காய் வற்றலும் செய்யப்படுகின்றது.பித்தத்தை அதிகம் சுரக்கும் குணமுடையது.

வருடம் முழுவதும் செய்கை பண்ணக்கூடிய கொத்தவரையை நீர் வடிந்தோடக்கூடிய மணல்கலந்த வண்டல் மண்ணிலும் வடிகால் வசதியுள்ள இருவாட்டி நிலங்களில் செய்கை பண்ணலாம்.

1-1 1/2 இடைவெளியில் 6”-10” வரிசையில் விதைக்கலாம் தகரை விதைகளைப் போன்று சிறிதாக காணப்படும். இவ்விதை ஒரு ஏக்கருக்கு 4கிலோ தேவைப்படும் இதன் விதை தேவைப்படுபவர்கள் குடமியன் பண்ணையுடன் தொடர்பு கொள்ளலாம்.

**“உரம்,மருந்து வகைகள் பயன் படுத்தாது சேதன பசளைகளை உபயோகித்து உற்பத்தி செய்யப்டும் கொத்த வரையில் நோய்த்தாக்கம் ஏற்படுவதில்லை.”**

# விவசாயத்தில் வங்கிக் கடன்கள்

## ஏற்படுத்தியிருக்கும் புதிய படிப்பினைகள்

தமது விவவசாய நடவடிக் கைகளுக்காக வங்கிகளிடமிருந்து கடன்களை பெற்றுக் கொண்டவாகள் அதனை மீளச் செலுத்த முடியாத நிலையில் அக்கடன்களை ரத்துச் செய்யுமாறு விடுத்துவரும் கோரிக்கை வங்கிகளுக்கும் விவசாயிகளுக்கு மிடையே இன்று சர்ச்சைக்குரிய விவகார மாக மாறியிருக்கிறது.

நீண்டகாலமாக தமக்கான பயிர்ச் செய்கை நடவடிக்கைளுக்கு வங்கிகள் உதவுவதில்லை என்கிற விவசாயிகளின் தொடர் முறைப்பாட்டுக்கு முற்றுப் புள்ளி வைக்குமாப் போல் 2011, 2012, 2013 காலப் பகுதியில் சுமார் 6000க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கென ஏறத்தாழ நூறு கோடி ரூபாவுக்கும் மேல் யாழ் மாவட்டத்தின் அரசாங்க வங்கிகளிட மிருந்து இந்த கடன்கள் விவசாயிகளுக் காக வழங்கப்பட்டிருக் கின்றன.

யுத்த நடவடிக்கைகள் முனைப் படைந்திருந்த காலப்பகுதியில் இந்த விசாயிகளுக்கு அரசு உதவ சந்தர்ப்பம் கிடைக்காமற்போயிருந்த ஒரு சூழலையும் கவனத்தில் கொண்டு பெருந்தொகை நிதியை மிகக் குறுகிய காலத்தில் அரசு கடனாக வழங்க முன்வந்திருந்ததையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

குறிப்பாக யாழ்மாவட்டத்தின் வலிகாமம் கிழக்கு, வடக்கு, தெற்கு வலயங்களிலிருந்தே கூடுதலான விவசாயிகளுக்கு இந்த கடன்கள் வழங்கப் பட்டிருக்கின்றன.

குடாநாட்டு விவசாயிகளின் வரலாற்றில் மிக்க குறுகிய காலத்தில் ஆகக் கூடுதலான விவசாயிகளுக்காக பெருந்தொகை நிதியை வழங்கிய ஒரு கடன் திட்டமாகவும் இதனைக் குறிப்பிட முடியும்.

> "குறிப்பாக யாழ் மாவட்டத்தின் வலிகாமம் கிழக்கு, வடக்கு, தெற்கு வலயங்களி லிருந்தே கூடுதலான விவசாயிகளுக்கு இந்த கடன்கள் வழங்கப் பட்டிருக்கின்றன."

பணப்பயிர்களான திராட்சை, வெங்காயம் மற்றும் புகையிலை செய்கைக்கென இந்த விவசாயிகளில் கூடுதலானோர் கடன்களை பெற்றுக் கொண்ட போதும் பணம் பறிக்கும் சில இடைத்தரகர்களையும் சில அதிகாரி களையும் பயன்படுத்தி விசாயி களல்லாதோரும் ஒழுங்கு விதி களுக்கு முரணாக மோசடியான முறையில் பெருந்தொகை நிதியை கடனாக பெற்றுக் கொண்டுள்ளதாகவும் பிந்தியதாக செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

இதனைவிட தொகுதி மட்டத்தில் இந்த விவசாயக் கடன் களுக்கென உரிய சிபார்சை செய்ய வேண்டிய விவசாயிகள் சம் மேளனத்தின் பிரதிநிதிகள் விவ சாயிகளல்லாதோருக்கும் இந்த கடன் களை சிபார்சு செய்ததில் இந்த விவசாயத்துக்கான கடன்நிதியை தவறாக வேறு மோசடி வர்த் தகர்களும் பயன்படுத்திக் கொள்ள இந்த விவசாய பிரதி நிதிகளே சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி கொடுத் திருப்பதாகவும் குற்றச்சாட்டுக்கள் இப்போது முன்வைக் கப்பட்டிருக் கின்றன.

விவசாய செய்கைக்கென கடன் களை பெற்றுக் கொண்ட வர்களில் பெரும் பாலானோர் திராட்சை உற்பத்திக்காக அப் பணத்தை முதலிட்

டிருந்த நிலையில் இனங்காண முடியாத புதிய நோயின் தாக்கத்தால் மிகுந்த நஷ்டத்தினை எதிர் கொண் டார்கள் என்பது உண்மையே.

. அவ்வாறே இந்த கடன்களை பெற்றுக்கொண்ட வெங்காயம் மற்றும் உப உணவு பயிர்ச் செய்கைாளர்கள் பருவம் தப்பிய மழையாலும் அறுவடைக் காலங்களில் சந்தை விலையின் திடீர் வீழ்ச்சியினாலும் போக்குவரத்தில் எதிர் கொண்ட பெரும் சிரமங்கள் செலவு களாலும் பெரிதும் பாதிக்கப் பட்டிருக் கிறார்கள்.

ஆனால் வேறு தேவைகளுக் காக மோசடியான முறையில் இந்த வங்கிக் கடன்களை பெற்றுக் கொண்டவர்கள் தாமும் விவசாயி என்கிற போர்வையில் பாதிப்புக் குள்ளான இந்த விவசாயி களோடு சேர்ந்துகொண்டு தமது வங்கிக் கடன்களை ரத்து செய்ய கோரும் வேடிக் கையான நிகழ்வும் கூடவே இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

இந்த விவசாயக் கடன்களை பெற்றுக் கொண்டவர்களில் நியாயமாக உண் மையில் யார் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என்கிற வகை தெரிவை எவ்வாறு மேற் கொள்வது என்பதில் வங்கி நிர்வாகிகளும் கூடவே மூளையை கசக்கி பிழிந்து கொண் டிருக்கும் நிலையில் புதிய அரசாங் கத்தின் 100நாள் வேலைத்திட்டத்தில் இந்த விவசாயக்கடன்களில் 50சத வீதத்தை ரத்துச் செய்வதாக வெளியான அறிவிப்பும் கூடவே இந்த விவசாயிகளுக்கும் வங்கி அதிகாரி களுக்கும் இடையே புதிய பிரச்சினை களை தோற்றுவித்துள்ளன.

இதனைவிட பெற்ற கடனை மீளச் செலுத்த புதிய கடனை பெற்றுக் கொள்ளும் திட்டமொன்றை இந்த வங்கி நிர்வாகமும் விசாயிகளும் ஆலோசித்து வரும் நிலையில் கடன்களை ரத்துச்செய்ய விடுக்கப் பட்டுவரும் கோரிக்கைகள் இரு தரப்புக்குமிடையே குழப்பமான ஒரு நிலையை தோற்றுவித்துள்ளன.


இந்த சர்ச்சையின் தொடர்ச் சியாக விவசாயிகளுக்கான சங்கங்கள் மற்றும் சமாச மட்டத்தில் செயற்படும் பிரதிநிதிகள் நேர்மையாக வெளிப் படைத்தன்மையுடன் செயற்பட்டிருந் தால் இந்த மீளச் செலுத் தலில் வங்கிகளுக்கும் விவசாயி களுக்கும் இடையில் ஏற் பட்டிருக்கும் இழுபறியை தீர்த்திருக்க முடியும் என்றொரு கருத்தும் இப்போது விவசாயிகள் மத்தியில் பரவலாக உணரப்பட்டிருக்கிறது.

விவசாயத்துறையுடன் தொடர்பு படும் அரச, அரசசார்பற்ற நிறுவனங் களும் அதிகாரிகளும கூட விவசாயி எதிர் கொள் ளும் உண் மை யான நெருக்கடி நிலையை புரிந்து செயற்பட முன்வராதிருக்கும் சமகால சூழலில் இந்த கடன் நெருக்கடி விவகாரத்தை எந்தத் தரப்பிடம் சென்று தீர்த்துக் கொள்வ தென்பது ஒரு தீராப் பிரச்சினை யாகவே தொடர்ந்து கொண்டி ருக்கிறது.

இ ந் த நி லை யி ல் இ த் தொழிலையே முழுநேர மாகக் கொண்டு அதனை நம்பி வாழும் விவ சாயிகளை இனங் கண் டு அவர் களது பயிர் தொழிலின் பாதுகாப்பை உத்தரவாதம் செய்யும் தமக்கான அமைப்பு ரீதியான ஏற்பாடொன்று இல்லாத நிலையே இந்த நிலமைக்கு காரணமென்பதும் இப்போது அவர்களால் உணரப்பட்டிருக்கிறது.

உண்மையான ஒரு தலைமைத்து வத்தின் கீழ் தமது பயிர்த்தொழில் முகாமை செய்யப்படாதவரை பரந்து பட்டு தேசிய ரீதியில் தமது பயிர்த்தொழிலை முன்னெடுத்து செல்வது சாத்தியமற்ற ஒரு முயற்சி என்பதும் இந்த விவசாயிகளால் பிந்தியதாக சுட்டிக்காட்டப்பட்டிருக் கிறது.

> “இந்த நிலையில் இத் தொழிலையே முழுநேர மாகக் கொண்டு அதனை நம்பி வாழும் விவ சாயிகளை இனங்கண்டு அவர்களது பயிர் தொழிலின் பாதுகாப்பை உத்தரவாதம் செய்யும் தமக்கான அமைப்பு ரீதியான ஏற்பாடொன்று இல்லாத நிலையே இந்த நிலமைக்கு காரணமென்பதும் இப்போது அவர்களால் உணரப்பட்டிருக் கிறது. ”




# சிறுபோக ஈவு

**"கடந்த கால தவறுகள் திருத்தப்பட வேண்டும் என்பதற்காக இக் கட்டுரையில் பெயர் குறிப்பிடுவது தவிர்த்துக்கொள்ளப் படுகிறது"**

மன்னார் மாவட்ட கட்டுக்கரைக் குளத்தின் கீழ் சிறுபோகம் செய்வதற்கான முதல் ஏற்பாடு "சிறு போகக் கூட்டம்" கூடுவதிலிருந்து ஆரம்பிக்கும். இக் கூட்டத் திற்கு துறை சார்ந்த அதிகாரிகளும் விவசாய அமைப் புக்களின் தலைவர்களும் விவசாயி களும் கலந்து கொள்ளவர் இந்தக் கூட்டத் தில் முக்கியமான சில தீர்மானங்கள் எடுக் கப்படும் கட்டுக்கரையில் உள்ள நீர் மட் டத்தை கருத்திற்கொண்டு எத்தனை குளப்படுக்கைகளில் சிறுபோகம் செய்வது? பெரும்போகம் செய்தகாணி களின் எத்தனை வீதம் சிறுபோகத்தில் செய்வது? இவை இரண்டும் போகமற்றத் தீர்மானங்கள் வழமையாக நடைமுறையில் உள்ள னவையே.

சிறுபோகச் செய்கைக்கான காலம் வந்துவிட்டால் நீர்ப்பாசனத் திணைக் களமும்,கமநலசேவை நிலையமும் விவசாய அமைப் புக்களின் தலைவர்களும் பரபரப்பாகிவிடுவார்கள். காரணம் சிறு போகம் செய்வதற்கு காணிகளை குறுக்கு வழிகளில் பெற முயற்சிசெய்யும் செய்கை யாளர்களின் அட்டகாசம்.

ஒவ்வொரு வருடமும் சிறுபோகச் செய்கையின் போது தீர்மானங்கள் மீறப்படுவது சர்வசாதாரணமாக நடை பெறும் ஒரு குளப்படுக்கையில் தீர்மானிக் கப்பட்டகாணி அளவை விட மேலதி கமாக காணிகளைச் செய்தல், லஞ்சம் கொடுத்து ஈவுகளைப்பெறுதல், சில அதிகாரிகள் தமக்கென ஒரு பகுதி காணியைப் பெற்றுக் கொள்ளுதல் அல்லது தமக்கு வேண்டியவர் களுக்கு விசேடமாக செய்கைக்கு அனு மதித்தல் பொதுத்தேவை அல்லது நிதித் தேவைக்காக காணிகளை ஒதுக்கிக் கொடுத்தல் இது போன்ற பலவித மான தில்லுமுல்லு வேலைகள் நடை பெறும்.

இவை போக கமநல சேவை நிலைய அதிகாரிகளையும்,நீர்ப்பாசன திணைக்கள அதிகார்களையும் விவசாய அமைப்புக்களின் தலைவர்களும் நிர்வாகத்தினரும் தமக்கு தேவைக் கேற்றவாறு பயன்படுத்திக் கொள்வது நீண்ட காலமாக நடைபெற்று வருகின்றது.

இவை அனைத்தும் சாதாரண விவசாயிகளை பாதிக்கும் விடயங்கள் என்பதை சம்மந்தப்பட்வர்கள் புரிந்து கொள்ளமாட்டார்கள். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு பெரும்போக செய்கை பண்ணும் வயல் நிலங்களில் சிறு போகம் செய்யும்படி விவசாயிகளை தூண்டி விட்ட நீர்ப்பாசனத்திணைக்களம், நீர் முகாமைத்துவத்தினைக் கடைப் பிடிக்காமல் அவ்வருட சிறுபோகம் நீரின்மையால் அழிந்ததும், அதே வயல்களில் பெரும் போகம் செய்ய நிர் ப்பந்திக்கப்பட்டு உரிய விளைச்சல் கிடைக் காமல் போனதும் மாவட்ட விவசாயிகள் அறிந்ததே.

இக் கட்டுரையில் கடந்த கால தவறுகள் திருத்தப்பட வேண்டும் என்பதற்காக இக்கட்டுரையில் பெயர் குறிப்பிடுவது தவிர்த்துக்கொள்ளப் படுகிறது இனிவரும் காலங் களில் உழவன் மாத இதழ் விவசாயிகளின் பிரச்சினை களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் என்பதை சொல்லி வைக்க கடமைப் பட்டுள்ளோம்.





# செலவில்லாத வருமானம்

Watermelon என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் வர்த்தகைப் பழம் இதை இந்தியர்கள் "தர்பூசணி" என்றும் அழைக்கின்றனர். வெயில் அதிகமாக காணப்படும் காலங்களில் வீதியோரங்களில் குவியல்குவியலாக வர்த்தகைப்பழத்தை பார்க்கலாம். உடல் சூட்டை தணிப்பதில் இப்பழம் முக்கியத்துவம் பெறுகின்றது.

இந்தியாவில் பெரும்வர்த்தக நோக்கத்துடன் வர்த்தகை பயிரிடப்படுகிறது. வெப்பம் அதிகமாக இருப்பதனாலும், சனத்தொகை அதிகமாக இருப்பதனாலும் வர்த்தகைப்பழம் வர்த்தக நோக்கத்துடன் செய்கை பண்ணப்படுகின்றது.

நமது நாட்டில் மார்ச் மாதத்தில் இருந்து மே மாதம் வரை கொழும்பிலும் பிரதான வீதி ஓரங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றது. சிங்களவர்கள் விரும்பிச் சாப்பிடுவது போல் தமிழர்கள் விரும்புவதில்லை.

வண்டல் மண்ணிலும், நீர்வழிந்தோடக்கூடிய இருவாட்டி மண்ணிலும், தென்னந்தோட்டங்களிலும் வடகீழ் பருவப்பெயர்ச்சி மழைக்குப்பின் ஐனவரி பெப்ரவரி மாதங்களில் வர்த்தகைப் பயிர்ச்செய்கை செய்யலாம் மானாவாரியாக பூசணி நடுவது போல் குழிகளில் 3-4 விதைகளை ஊன்றி விட்டால் போதும் தண்ணீரோ, உரமோ மருந்தோ இல்லாமல் கடும் வரட்சியிலும் செழிப்பாக படர்ந்து ஏப்ரல், மே மாதங்களில் அறுவடை செய்யலாம். தம்புள்ளை சந்தைக்கு அனுப்புவதன் மூலம் அதிக லாபம் பெறலாம்.



# நஞ்சில்லாத பச்சிலைகள்

த.க.கணேசலிங்கம்
முன்னாள் பண்ணை முகாமையாளர்

நஞ்சில்லா பச்சிலைகள்
நலம் தருமே நம்பிடுவீர்
உச்சமாய் உயிர்ச்சத்தும்
உயர்வான நார்ப்பொருளும்
மெச்சும் வகையான
மேன்மை தரும் நாம் அறிவோம்
அச்சமது கொள்ளாது
அனைவருமே சுவைத்திடலாம்.

நிச்சயமாய் நீண்ஆயுள்
நிம்மதியாய் வாழ்ந்திருக்கலாம்
பச்சை இலை மரக்கறிகள்
பாரெங்கும் பசுமைதரும்
துச்சமென எண்ணாது
துளிர் எடுத்து சமைத்திடுவீர்
கச்சிதமாய் இலைக்கஞ்சி
காய்ச்சிப்பருகிடலாம்

எச்சமயமென்றாலும்
எங்கும் இவை பெற்றிடலாம்
நச்செதுவும் இல்லாத
நம் ஊர் இலை மரக்கறிகள்
பச்சடியும் செய்திடலாம்
பலரகமாய் துவையல்களும்
இச்சையுடன் சுவைக்க
இவை பலதில் சேர்திடலாம்

கொச்சை இல்லை இவைகளினால்
கொல்லையிலே பெற்றிடலாம்
பிச்சை பெறச் தேவையில்லை
பிடுங்கிடலாம் வேலிகளில்
பூச்சி புழுத்தாக்காது
நோய் நொடிகள் அதிகம் இல்லை
நச்சடிக்கத்தேவையில்லை
நாள் இறைப்பும் அதிகமில்லை
உச்ச விளைவெத்தது
ஊரெல்லாம் சாப்பிடலாம்
மெச்சி எங்கள் எல்லையெல்லாம்
மேன்மைபெற வளர்த்திடலாம்
நிச்சயமாய் சொல்லுகிறேன்
நீளாயுள் நம்பிடுவீர்
அச்சமின்றித்தினம் ஒவ்வொர்
நச்சில்லாப் பச்சிலைகள்
இச்சையுடன் இணைந்திடுவீர்
இங்கிதமாய் வாழ்ந்திடுவீர்
சிக்கலில்லா இலைகறிகள்-மலச்
சிக்கலினைப் போக்கிடும்
அக்கால முனிவர்களின்
ஆயுள்தரு மூலிகைகள்
முக்காலும் உணர்வளிக்கும்
முதன்மைபெறு நல்லுணவே
தற்கால மனிதர்களைத்
தற்காக்கும் பேருணவு
உற்பத்தி செய்யாமல்
உலகமெங்கும் இயற்கையிலே
பற்றிப்படர்ந்திருக்கும்
பல கோடி இலைகறிகள்
அற்பத்தனம் இல்லாது
அனைவருமே உண்டிடுவீர்
உற்பத்தியாக்கி உயர்விளைவு கண்டிடலாம்
சொற்ப உழைப்பினிலே
சொர்க்கத்தைப் பெற்றிடலாம்
அற்புதமாய் இவையறிந்து
அதிக சுகம் பெற்றிடுவீர்

பச்சைக்குழந்தை முதல்
பழங்கால முதியவரும்
இச்சையுடன் இலையுண்டு
முறை சுகம் பெற்றிடலாம்.

# வலிகாமம் கிழக்கு உரும்பிராயில் பயிர்ச்செய்கையை வாழ்நாள் தொழிலாகக் கொண்டிருக்கும் விவசாயியுடன் ஒரு நேர்காணல்

உரும்பிராய் வடக்கில் சுமார் 45 ஆண்டுகள் விவாயத்தையே முழுநேரமாக மேற் கொண்டு வரும் நாகன் செல் வராஜா அவர்கள் தனது பயிர்த்தொழில் அனுபவத்தை சக விவசாயிகளுக்கும் பலனளிக்கும் வகையில் உழவன் சஞ்சிகையின் இரண்டாவது வெளியீட்டுக்காக வழங்கியிருக்கிறார்.

**நேர்காணல்: ரட்ணா சிதம்பரம்.**



**❊ முதலில் தங்களது தொழில் நிலை குறித்து நாங்கள் அறிய விரும்புகிறோம் -**

குடும்பநிலை காரணமாக 10 வயதில் இருந்தே பாடசாலை கல்வியை முடித்துக் கொண்டு இந்த விவசாயத்தில் இறங்கி விட்டேன். இப்போது எனக்கு வயது 55. என்னுடன் இருக்கும் எனது பிள்ளைகள் மூவரும் இப்போது இந்த தொழிலில் என்னோடு முழுநேரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

என்னைப் பொறுத்த வரையில் உரிய காலத்தில் அந்தந்த பயிரை செய்கை பண்ணுவது என்பது ஒருபுறமிருக்க வெளியே கூடுதலான விவசாயிகள் கவனம் செலுத்தாதிருக்கும் புதிய பயிர் வகை களை செய்கை பண்ணுவதில் நான் கூடுதல் கவனம் செலுத்தி வருவதால் அவை எனது முயற்சிகளில் கை கொடுப்பனவாக இருந்து வருகின்றன.

**❊ உங்களது பயிர்த் தொழில் அனுபவத்திலிருந்து சக விவசாயிக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

காலம், சூழல், சந்தை நிலமை களை கவனத்திலெடுத்து அவ்வப்போது என்ன பயிரை இம்முறை செய்கை பண்ணலாம் என்பதில் நாம் சரியாக மேற்கொள்ளும் தீர்மானமே அந்த பயிர் மூலமான ஆதாயத்துக்கு அடித்தளமாக இருக்கிறது என்பதை இந்த தொழிலில் ஈடுபடும் விவசாயிகள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

குறித்த மரக்கறிக்கு அல்லது உற்பத்திக்கு நல்ல சந்தைவிலை கிடைப்பதாக உணரும் சந்தர்ப்பங்களில் சூழ வுள்ள விவசாயிகள் அனைவரும் அதே பயிரையே செய்கை பண்ணி அதனால் எல்லோருமே நஷ்டமடைந்து கொள்ளும் ஒரு போக்கு தவிர்க்க முடியாமல் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இந்த நிலை தவிர்க்கப்பட வேண்டும்.

இது விடயத்தில் நான் மிகவும் நாம் எச்சரிக்கையாக இருக்கிறேன். புறத்தே சூழலில் செய்கை பண்ணப்படுவதை தவிர்த்து எப்போதும் புதிதாக வேறொன்றை தேர்வு செய்வதிலேயே இந்த பயிர்த்தொழிலில் நான் வெற்றி கண்டு வருகிறேன். இப்படி நான் கூறுவது இவ்விடத்தில் பொருத்தமாக இருக்கும் என கருதுகிறேன்.

**❊ நீங்கள் திராட்சை செய்கை யிலேயே கூடுதல் கவனம் செலுத்தியிருப் பதாக அறிகிறோம். இதில் ஏற்பட்டுள்ள அனுபவங்கள் பற்றி சற்று கூறுங் களேன்.**

யுத்த சூழலின் போதும் அதன் பிறகும் கொழும்புக்கான போக்குவரத்துக்கள் சாதகமாக இருந்த சூழலில் குடாநாட்டு விவசாயிகளுக்கு இந்த திராட்சை பழ உற்பத்தி மிகவும் இலாப கரமான உற்பத்தியாக இருந்ததை நான் மறுக்கவில்லை. கூடுதலான உற்பத்தி இடம்பெற்ற அந்த சமயத்தில் கொழும்புக்கான சந்தை விலை கிலோ ஒன்றுக்கு 250 முதல் 300 ரூபா வரை கிடைத்தது.

தினசரி ஒரு லொறியில் 10ஆயிரம் கிலோ வீதம் குறைந்தது பத்துக்கும் மேற்பட்ட லொறிகள் யாழ்ப்பாணத்திலருந்து கொழும்புக்கு பழங்களை கொண்டு செல்வது வழமையாக இருந்தது. அதாவது நாளாந்தம் ஒருலட்சம் கிலோ திராட்சை பழங்களை எமது குடாநாட்டு விவசாயிகள் கொழும்புக்கு அனுப்பக் கூடியதாக இருந்தது.

சுமார் 3000க்கும் அதிகமான விவசாயிகள் யாழ்மாவட்டத்தில் இந்த செய்கையில் ஈடுபட்டிருந்த நிலையில் ஒரு திராட்சை செடியிலிருந்து 50 கிலோ பழங்கள் வரை ஒரு போகத்துக்கு அறுவடை செய்யக் கூடியதாக இருந்தது. ஆனால் இப்போது 10 கிலோபழம் பெறுவது என்பதே பெரும் சவாலாக இருக்கிறது.

வடமராட்சி, அச்சுவேலி உரும்பிராய், அளவெட்டி, மண்கும்பான் வேலணை, வலிகாமம் தெற்கிலுள்ள மேட்டு நிலப் பகுதிகள் உட்பட குடாநாடு முழுவதுமாக சுமார் 5000 ஏக்கரில் இந்த திராட்சை செய்கை இடம்பெறுவதாக என்னால் கூறமுடியும்.

**❋ இந்த உற்பத்தியில் தரமான பழங் களை பெறுவதற்கான தங்கள் ஆலோசனை என்ன?**

பராமரிப்பை பொறுத்து 10 ஆண்டுகள் வரை திராட்சை பலன்தரக் கூடியது. திராட்சை பழங்களில் புளிப்பானவை இனிப்பானவை என இருவகை பற்றி பேசிக்கொள்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் இஸ்ரேல் புளு (istreal blue) என்ற ஒருவகை மட்டுமே கூடுதலாக பயிரிடப்படுகிறது.

செய்கை முறையிலுள்ள குறைபாடுகள் காரணமாகவே இனிப்பாக இருக்க வேண்டிய பழங்கள் புளிப்பான தன்மையை கொண்டிருக்கின்றனவே தவிர இயற்கையாக அப்படி ஒரு நிலமை இல்லை.

இயற்கை உரங்களை கூடுதலாக பாவிக்கும் போதும் இயற்கையாக பழுப்பதற்கான நிலமைகளை அனுமதிக்கும் போதும் இனிப்பான பழங்களை திராட்சையிலிருந்து நிச்சயம் பெற முடியும். இது எனது அனுபவம்.

ஆனால் அளவுக்கதிகமான கூடுதல் விளைச்சலை எதிர்பார்த்து செயற்கை உரங்களை பாவிக்கும் போதும் நல்ல விலை கிடைக்கும் சந்தர்ப்பங்களில் உடனடி அறுவடைக் காக அவற்றை பழுக்கவைப்பதற்கான இரசாயனங்களை விசிறும்போதும் அவை இயல்பாக முற்றிப் பழுக்காத நிலையில் அப்பழங்கள் புளிப்புத் தன்மையை கொண்டிருக்கின்றன.

உடன் பழுக்கவைக்கும் இரசாயனங்களை பாவித்து குறுகிய காலத்தில் கூடுதலான பழங்களை சந்தைப் படுத்தும் போது எதிர்பார்த்த விலைகள் கிடைக்காத நிலைமையையே அனேகமாக விவசாயிகள் எதிர்கொள் கிறார்கள். இது ஒரு தேவையற்ற துன்பமான நிலமையாகும்.

இந்த செயற்கையான இந்த முறை குறித்த பயிரை மட்டுமன்றி அதனை உண்ணும் பொதுமக்களையும் பாதிப்பதாக இருப்பதால் இது அவசியம் தவிர்க்கப்பட வேண்டும்.

**❋ இந்த பழச்செய்கையின் சமகால சூழலுக்கு வருவோம். இப்போது நிலமைகள் எப்படி இருக்கின்றன.?**

இப்போது அதாவது 2013 இற்குப்பிறகு நிலமை தலை கீழாக இருக்கிறது. புதுவிதமான ஒருவித நோய்த்தாக்கத்தை திராட்சை செய்கையாளர்கள் எதிர்கொண்டிருக்கிறார்கள். திராட்சை பூப்பதற்கும் பங்கசு தொற்றுகளிலிருந்து பாதுகாப்பதற்குமாக நீண்ட காலம் பாவித்து வந்த மருந்துகள் இப்போது இல்லை. அல்லது அவை செயலிழந்தவையாக இருக்கின்றன.

அதாவது இப்போது திராட்சைக்காக அறிமுகப்படுத்தப் பட்டிருக்கும் புதிய மருந்துகள் செடிகளை செழிப்பாக வைத்திருப் பதற்குப்பதில் புதுவித நோய்களை ஏற்படுத்துவனவாக இருக்கின்றன. இந்த மருந்துகளை பாவித்த மறுதினத்தில் காய்களிலும் இலைகளிலும் ஒருவகை கரும்புள்ளி நோய்த் தாக்கத்தை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

சில இடங்களில் இந்த மருந்துகளை விசிறிய பின்னர் பூவி லிருந்து வெளியேறிய பிஞ்சுகள், மற்றும் காய்கள் வாட்டம் கண்டிருப்பதையும் நாம் அவதானித்துள்ளோம்.

**❋ இந்த பாதிப்புக்கு என்ன மாற்று நடவடிக்கை என நீங்கள் எண்ணு கிறீர்கள்?**

எல் மத்தியோன்-40, குளோறோபைறிபோஸ் ஆகிய மருந்துகள் முன்பு திராட்சை செடிகளை ஆரோக் கியமாக பேணுவதற்கும் அவ்வாறே பூக்கவும் காய்க்கவும் புழுத்தாக்கத்தை கட்டுப் படுத்தவும் சிறந்த மருந்துகளாக நாம் பாவித்து வந்தோம். ஆனால் இப்போது இவை சந்தையில் கிடைப் பதாக இல்லை. இதனை பெற்றுக் கொடுக்குமாறு கொழும்பிலுள்ள விநியோகஸ்தர்களிடத்தில் நாம் கோரியபோதிலும் இவற்றுக்குப்பதில் வேறு மருந்துகளையே அவர்கள் கூறுகிறார்கள். அந்த மருந்துகள் மேற்கூறிய பாதிப்பை ஏற்படுத்துவனவாகவே உள்ளன.

இந்தியாவிலிருந்து சிறந்த மருந்துகள் முன்பு கிடைத்து வந்தன. ஆனால் இப்போது அவற்றை எமது நாட்டில் பெற முடியாதிருப்பதை ஒரு துர்ப்பாக்கியமான நிலமையாகவே நாம் கருதுகிறோம்.

**❋ பிந்தியதாக இந்த பழச்செய்கை எப்படி இருக்கிறது?**

இந்த நோய்த்தாக்கங்கள் காரணமாக திரட்சை உற்பத்தி முன்பிருந்த நிலமை யிலிருந்து இப்போது பத்தில் ஒன்றாக குறைந்து விட்டது. அதாவது நாளொன் றுக்கு ஒரு லட்சம் கிலோ பழங்கள் கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்த நிலையில் இந்த உற்பத்தி இப்போது நாளொன்றுக்கு 10ஆயிரம் முதல் 15ஆயிரம் கிலோ வரையானதாக குறைந்து விட்டது.

இப்போது கொழும்பு சந்தைகளில் இந்த பழங்களுக்கு நல்ல கிராக்கி நிலவுகிறது. ஆனால் எமது தோட்டத்தில் இந்த பழச்செடிகள் செடிகள் பூப்பதை, காய்ப்பதை நிறுத்திக் கொண்டுள்ளன. செடிகள் துளிர்த்து செழிப்பாக இருப்பதை காண்பது மிக அரிதாகவே இருக்கிறது. குடாநாடு முழுவதும் இந்த பழச் செய்கையின் நிலை இப்போது இவ்வாறுதான் இருக்கிறது.

இந்த நிலை காரணமாக கணிசமான திராட்சை செய்கையாளர்கள் தமது செய்கை முயற்சிகளை இப்போது மட்டுப்படுத்திக் கொண்டுள்ளார்கள். அல்லது வேறு பயிர்செய்கைக்கு தம்மை மாற்றிக்கொண்டுள்ளார்கள். பிந்திய நிலமை இதுதான்.

**❋ இப்போது நீங்கள் எதிர்கொண்டிருக்கும் பாதிப்புக்கு ஏதாவது மாற்று நடவடிக்கையை விவசாயத் திணைக்களம் மேற்கொண்டுள்ளதா? அதற்காக நீங்கள் எடுத்த முயற்சிகள் பற்றி நாங்கள் அறிந்து கொள்ளலாமா?**

திணைக்களங்களின் தரப்பிலிருந்து இதற்கான மாற்று நடவடிக்கைகள் வெகு அரிதாகவே இருக்கின்றன. ஒரு மாவட்டத்தில் குறித்த ஒரு பயிர்ச் செய்கை எதிர் கொண்டிருக்கும் பாதிப்பு பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள முதலில் அந்த செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் செய்கை பண்ணப் படும் இடங்கள், அதன் பரப்பளவு குறித்த அடிப்படையான தகவல்களை இந்த திணைக்கள அதிகாரிகள் முன்பதாகவே தேடி பெற்றுக்கொள்வது அவசியம். ஆனால் இந்த அடிப்படை விபரங்களை

கூட தெரிந்து வைத்திருக்க முடியாதவர்களாகவே இந்த அதிகாரிகள் இருக்கிறார்கள். குறித்த பயிர்ச்செய்கை குறித்த எந்த அடிப்படை தகவல்களும் இவர்களிடம் இல்லை என்றே கூற வேண்டும்.

இந்த நிலையில் மத்தியிலிருந்து அரசாங்கம் பாதிக்கப்படும் விவசாயிகளுக்காக நிவாரணங்களை அறிவிக்கும் போது உண்மையாக பாதிப்புக் குள்ளான விவசாயியை இனங்கண்டு அந்த நிவாரணத்தை குறித்த விவ சாயிக்கு முன்னுரிமைப்படுத்த முடியாதவர்களாகவே இந்த அதிகாரிகள் இருக்கிறார்கள்.

அதுமட்டுமன்றி சரியான தகவல்கள் கைவசம் இல்லாமையால் விவசாயி அல்லாத ஒருவருக்கு கூட அந்த நிவாரணத்தை சிபார்சு செய்யும் நிலையிலும் இந்த அதிகாரிகள் இருப்பதை வேதனையான ஒரு விடயமாகவே நான் கருதுகிறேன்.

கடந்த காலங்களில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட பல நிவாரணத் திட்டங்களின் நன்மையை பாதிக் கப்பட்ட குறித்த விவசாயிகள் பெற முடியாமற் போனதற்கான உண்மையான காரணம் இதுதான்.

**❋ சரி, பயிர்ப் பாதிப்புக்கு நிவாரணங் களை தேடுவதில் உங்கள் பகுதி விவசாய சம்மேளனங்களின் செயற்பாடுகள் எவ்வாறு இருக்கின்றன.?**

இதுவும் சிக்கலான ஒரு விடயமாகவே இருக்கிறது. முதலாவது இந்த சம்மேளனங்களில் தாம் உறுப்புரிமை வகிப் பதன் அவசியத்தை எமது பகுதி விவ சாயிகள் புரிந்து கொள்ள முடியாத வர்களாக இருக்கிறார்கள். அவ்வாறே இந்த கூட்டங்களுக்கான அழைப் பையும் உதாசீனம் செய்பவர் களாகவும் அவர்கள் இருக்கிறார்கள்.

புதிதாக நிர்வாகத்தை தெரி வதில் எந்த அக்கறையும் இவர் களிடத்தில் இல்லாமையால் பத்து வருடங்களுக்கும் மேலாக ஒருவரே தொடர்ந்தும் தலைவராக இருக்கும் நிலை எமது பகுதி உரும்பிராய் வடக்கு விவசாய சம்மேளனத்தில் காணப் படுகிறது.

சம்மேளனத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களும் கூட விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து கலந்தாலோசிப்பதற்கான சந்திப்புக்கள் எதனையும் எதனையும் மேற்கொள்ளாமையால் திணைக்கள தரப் பிலிருந்து அவ்வப்போது கிடைக்கும் உதவிகளை கூட தன்னிடம் வரும் விவசாயிகளுக்கு விரும்பியவாறு விநியோகிக்கும் நிலையிலேயே இந்த நிர்வாகம் இருக்கிறது. இதுதான் எமது பகுதி சம்மேளனத்தின் நிலமையாக இருக்கிறது.

இந்த நிலையில் பாதிக்கப்படும் உண்மையான விவசாயிக்கான நிவார ணத்தை அரசிடமிருந்து நியாயமாக பெற்றுக் கொடுப்பதென்பது ஒரு சவாலான முயற்சியாகவே எமக்கு இருக்கிறது.

இருப்பினும் இந்த நிலமை தொடர்ந்து நீடிப்பதை நாம் விரும்பவில்லை. இதுவிடயத்தில் சம்மேளனங்களின் நடவடிக்கைக்கு பொறுப்பான அதிகாரிகளுடன் இணைந்து பாதிப்புக் குள்ளாகும் விவசாயியை பாதுகாக்கவும் கூடவே அவனது பயிர்தொழிலை தொடரவும் தேவையான உதவிகளை பெற்றுக்கொடுப்பதில் எமது சம்மேளனத்துக்கும் கணிசமான பங்குண்டு என்பதை நாம் தெளிவாக உணர்கிறோம்.

அதற்காக தேவையான நடவடிக்கைகளை உரியசந்தர்ப்பத்தில் முன்னெடுக்க வேண்டுமென்பதில் நாம் உறுதியாக இருப்பதையும் இவ் விடத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**"படிப்பறிவுக்கு அப்பால் நடைமுறை அனுபவமே எனக்கு பயிர்த்தொழிலில் கை கொடுத்திருக்கிறது"**


# உழவன்

## குறுக்கெழுத்துப் போட்டி

**உழவன் வாசகர்களே!**

துறைசார்ந்த வினாக்கள் அடங்கிய இப் போட்டியில் பங்கு கொண்டு பரிசுகளையும் பாராட்டுக்களையும் பெற வாழ்த்துக்கள்.

### குறுக்கெழுத்துப் பேட்டி-01



### மேலிருந்து கீழ்

01) நவதானியங்களில் ஒன்று. கோழிக்கான உணவு உற்பத்தியில் இது முக்கியமானது.

03) கால் நடை உணவாகப் பயன் படும் ஒருவகை பாசி.

05) இது ஒரு கொடிவகை மரக்கறி. நன்கு முற்றிய இக்காயின் ஓட்டை நம் முன்னோர்கள் பாத்திரங்களாகப் பாவித்தார்கள்.

07) வாழை தருவது தழைகீழாக உள்ளது.

18) மாட்டின் வயதை அறிவதற்கு உதவுவது.

28) கோழிவளர்ப்புக்கான உள்ளீடு களை வழங்கும் ஒரு நிறுவனம்.

29) பூவுக்கும் காய்க்கும் இடையில் உள்ளது தலைகீழாக உள்ளது.

40) மனிதர்களுக்கு தலையில் இருந்து கொண்டு தொந்தரவு கொடுக்கும் இது விலங்குகளிலும் உண்டு.

### போட்டி விதிகள்

போட்டிக்குரிய விடைகளை கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி 20.06.2015 திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடிய தாக அனுப்புங்கள்

**அனுப்ப வேண்டிய முகவரி**
**குறுக்கெழுத்துப் போட்டி எண்–01**
**உழவன் மாத இதழ்**
**குடமியன், வரணி.**

தங்கள் சரியான முகவரியையும், தொலைபேசி எண்ணையும் குறிப்பிட மறந்துவிடாதீர்கள். சரியான விடையினை அனுப்புவோரில் முதலாவது அதிஷ்டசாலிக்கு 1000 ரூபாவும், இரண்டாவது மூன்றாவது அதிஷ்டசாலிகளுக்கு முறையே 500 ரூபாவும் 300 ரூபாவும் பரிசாகவழங்கப்படும். மேலும் 10 அதிஷ்டசாலிகளுக்கு பெயர்கள் உழவனில் பிரசுரிக்கப்படுவதுடன் "உழவன்" மாத இதழ் இலவசமாக அனுப்பிவைக் கப்படும்.

### இடமிருந்து வலம்

01) பசும் பாலுக்கு ஈடான பால் தரும் ஒரு தானியம்.

12) "முறம்" என்றும் சொல்வர்கள்.

17) முக்கனிகளில் ஒன்று திரும்பி யுள்ளது.


25) நிறை உணவு திரும்பியுள்ளது.

29) திரிகடுகத்தில் ஒன்று. இது இஞ்சியில் இருந்து கிடைப்பது.

34) பெண் ஆடுகளை இப்படியும் அழைப்பர்.

43) சர்வதேச நெல்ஆராய்சி நிலையம் அமைந்துள்ள நாடு.





# உற்பத்திகளுக்கு நியாயவிலை கிடைக்காது விவசாயிகள் திண்டாட்டம்



விவசாயிகளின் விளை பொருட்களுக்கு உள்ளூர் சந்தைகளில் கிடைக்கின்ற விலைக்கும், அந்த உற்பத்திகளுக்கு நுகர்வோர் கொள்வனவுக்காக கொடுக்கின்ற விலைக்குமிடையே பாரிய இடைவெளி காணப்படுவதாக பரவலான ஒருமுறைப்பாடு உற்பத்தியாளர்களாலும் கூடவே பாவனையாளர்களாலும் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

பல சிரமங்களின் மத்தியில் இவற்றை உற்பத்தி செய்து அவற்றை விற்பதற்காக சந்தையில் பத்தில் ஒன்றை கழிவாகவும் கொடுத்து கூடவே குறைந்த விலையிலும் இந்த உற்பத்திகளை விற்பனை செய்ய வேண்டி இருப்பதாக குடாநாட்டின் சில சந்தைகளில் தமது உற்பத்திகளை சந்தைப்படுத்தும் விவசாயிகள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.


கூடவே சந்தையில் தமது உற்பத்திகளுக்கு கிடைக்கின்ற விலையை விட இருமடங்கு விலைகளில் இந்த மரக்கறிகள் பாவனையாளர்களுக்கு விற்கப்படுவதாகவும் விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

விவசாயி தாம் விரும்புகின்ற விலையில் விற்க முடியாத அளவுக்கு நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும் இதனால் தமது உற்பத்திகளுக்கு சுதந்திரமான சந்தை விலையொன்றை பெற்றுக்கொள்வது முடியாத ஒரு காரியமாகவே இருப்பதாகவும் விவசாயிகள் கவலை வெளியிட்டிருக்கிறார்கள். இதனைவிட சந்தைக்கு வெளியே வீதியில் வைத்து தமது உற்பத்திகளை இடைமறிப்பதுடன், வற்புறுத்தி ஒரு தலைப்பட்சமாக தமது உற்பத்திகளுக்கு சில இடைத்தரகர்களால் குறைந்த விலை வழங்கப்படுவதாகவும் முறைப்பாடுகள் எழுந்துள்ளன.

இந்த விவகாரத்தை சம்பந்தப்பட்ட பிரதேச சபையின் மக்கள் பிரதிநிதிகளது கவனத்துக்கு கொண்டு சென்ற போதும் நாங்கள் "சந்தையை குத்தகைக்கு கொடுத்து விட்டோம் எம்மால் ஒன்றும் செய்ய முடியாது" என அவர்கள் கைவிரிக்கும் நிலை காணப்படுவதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

உற்பத்தியை மேற்கொள்ளும் விவசாயியின் பொருளாதாரத்தை தீர்மானிப்பதாக அவனது உற்பத்திகளுக்கு கிடைக்கும் சந்தை விலை அமைந்திருப்பதால் பிரதேச மட்டத்தில் தெரிவாகி இருக்கும் விவசாய சம்மேளனங்கள் இந்த விவகாரத்தை மேலான கவனத்திலெடுத்து சந்தையில் சுதந்திரமாக தமது விளை பொருட்களை கூடிய விலையில் விற்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்தி தரவேண்டுமெனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**"சந்தையை குத்தகைக்கு கொடுத்து விட்டோம் எம்மால் ஒன்றும் செய்ய முடியாது"**



# பழமர நாற்றுக்களை வாங்கிச் செல்வோரின் கவனத்துக்கு..!

யாழ் மாவட்டத்தில் தரம் குறைந்த மற்றும் உறுதிப்படுத்தப்படாத பழமர நாற்றுக்களை விற்பனை செய்வோரிடம் விழிப்புடன் நடந்து கொள்ளுமாறு விவசாயத் திணைக்களம் பொதுமக்களை அறிவுறுத்தியிருக்கிறது.

திணைக்களத்தின் பெயரை பயன்படுத்தி இந்த போலி நாற்று விற்பனை இடம் பெறுவதாகவும், இந்த நாற்றுக்களை விநியோகித்துவரும் அரசாங்க இலச்சினை பொறிக்கப்படாத வாகனங்களை இனங்காணுமாறும், யாழ்மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் கீ.சிறீபாலசுந்தரம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

வெளிமாவட்டங்களில் இருந்து அலங்காரத் தாவரங்கள், பழமரக்கன்றுகள் விற்பனைக்காக யாழ்மாவட்டத்துக்கு எடுத்துவரப் படுகின்றன. இவற்றில் அலங்காரத்தாவரங்களை நேரடியாக பார்வையிட்டு கொள்வனவு செய்ய முடியும்.

ஆனால் நீண்டகாலத்துக்கு பயன்தரும் மா, பலா போன்ற மரக்கன்றுகளின் தரத்தை உறுதிப்படுத்தாது வாங்கிச்செல்வதால் அவர்கள் எதிர்பார்த்த பலன்களை பெற முடியாது போகலாமெனவும், இது நீண்ட காலத்துக்கு பாதிப்பை தரும் என்பதை கவனத்தில் கொள்ளுமாறும் பிரதிப்பணிப் பாளர் அறிவுறுத்தியிருக்கிறார்.

வீடு வீடாக சென்று இவ்வகையான போலி நாற்றுக்களை விவசாயத்திணக்களத்தில் பதிவினை மேற்கொண்டு விநியோகிப்பதாக இனந்தெரியாத நபர்களால் தவறான பிரச்சாரம் செய்யப்படுகிறது. எனவே இந்த நாற்றுக்களை வாங்கிச் செல்வோர் விழிப்புடன் நடந்து கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இவ்வாறான போலி நாற்று விற்பனையாளர்களை இனங்கண்டால் அப்பகுதி கிராம சேவையாளர், அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கோ அன்றி விவசாயத்திணைக் களத்துக்கோ அறியத்தருமாறும் பிரதி விவசாய பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.







## இது முழங்காவில் விவசாயிகளின்

# ஆதங்கம்

எதிர்காலத்தில் தமது விவசாய தொழிலை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு தேவையான தரைக்கீழ் நீரை பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடலாமென முழங்காவில் பிரதேச விவசாயிகள் கவலையுடன் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

இப்போதிருந்தே பயிர்ச் செய்கைக்கான நீர் முகாமைத்துவ மொன்றை இனங் காணத்தவறின் இனிவருங் காலங்களில் முழங்காவில் பகுதிவாழ் மக்கள் நன்நீருக்காக வெளியிடங்களில் உள்ள நீர்நிலைகளை எதிர்பார்த்திருக்கும் நிலை உருவாகலாம் என்றொரு கருத்தும் அப்பகுதி விவசாய அமைப்பின் பிரதிநிதிகளால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

ஏ 32 வீதியில் மன்னாரிலிருந்து 32ஆவது மைல்கல் தொலைவில் முழங்காவில் பிரதேசம் அமைந்திருக்கிறது. 1964 காலப் பகுதியில் சிறீமாவோ பண்டாரநாயக்கா பிரமராக இருந்த சமயம் குடாநாட்டு விவசாயிகளுக்கான புதிய விவசாய குடியேற்றத்திட்டங்களை அறிமுகம் செய்வதன் ஒரு முயற்சியாக முழங்காவில் பகுதிக்கான குடியேற்றத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

ஆரம்ப நடவடிக்கையாக 1964 இல் முன்னெடுக்கப்பட்ட குடியேற்ற நடவடிக்கைகளில் தலா 5ஏக்கர் வீதம் 100 விவசாயிகளுக்கு 500 எக்கர் காணிகள் வழங்கப்பட்டன.

இதனை அடுத்து 1978 காலப்குதியில் ஆரம்பிக்கப்பட்ட படித்த வாலிபர் குழாய்க்கிணற்று திட்டத்தின் கீழ் தலா 2ஏக்கர் வீதம் 280 இளைஞர்களுக்கென 560 ஏக்கர் காணிகள் வழங்கப்பட்டிருந்தன.


ஒவ்வொரு 20ஏக்கர்களையும் உள்ளடக்கி ஒரு பிரிவாக மொத்தம் 28 பிரிவுகளாக்கப்பட்டு (block) இக் காணிகளுக்கென 28 குழாய்க் கிணறுகளிலிருந்து கனரக டீசல் இயந்திரங்கள் மூலம் நீர் விநியோகிக்கப் பட்டிருக்கிறது.

இதன் பின்னர் 1982 காலப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணிப்பீட்டில் அப்போது நிர்மாணிக்ப் பட்டிருந்த சுமார் 30 குழாய்க் கிணறுகளிலிருந்து 300ஏக்கருக்கும் குறைவான காணிகளிலேயே பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இப்பிரதேசத்துக்கான நீர்வளம் பற்றிய பகுப்பாய்வில் முதலாம், இரண்டாம் தொகுதி காணிகளுக்கென அமைக்கப்பட்ட குழாய்கிணறுகளில் சவர்த்தன்மை இருந்தமை கண்டறிப்பட்டு இந்தக்கிணறுகளிலிருந்து மட்டுப் படுத்திய நீரை பயன்படுத்தவே அதிகாரிகள் ஆலோசனை வழங்கியிருந் தார்கள்.

போருக்கு பிந்திய சமகால நிலமைகளில் இப்போது 870 விவசாயக் குடும்பங்கள் முழங்காவில் கிராமசேவகர் பிரிவில் பதிவாகி இருக்கின்றன. இக்குடும்பங்கள் ஒவ்வொன்றும் தமக்கென தனியான குழாயக் கிணறுகளை அமைத்துக்கொண்டுள்ள நிலையில் முழங்காவில் பிரதேசத்தின் பல்வேறு





பகுதிகளையும் உள்ளடக்கி சுமார் 1000 ஏக்கருக்கும் அதிகமான காணிகளில் பயிர்ச்செய்கைக்காக இந்த தரைக்கீழ் நீரை இங்குள்ள விவசாயிகள் பயன் படுத்தி வருகிறார்கள்.

> பாலி ஆற்று நீரை முழங்காவில்லை அண்டியுள்ள குளங்களுக்கு திருப்புவதன் மூலம் தரைக்கீழ் நீர்வளத்தை பாதுகாக்க முடியும் என்ற தமது ஆலோசனையை முன்வைத்திருக்கிறார்கள்.

குடாநாட்டின் விவசாய நிலங் களை போன்ற செம்மண் பிரதேசமாக இது காணப்படுகின்ற போதும் பெரும் பாலான கிணறுகளில் சுமார் 80 அடி ஆழத்துக்கும் கீழேயே நீர்வளம் காணப் படுவதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

இதனால் பயிர்ச்செய்கைக்காக நீரிறைக்கும் கனரக இயந்திரங்களை கூடுதல் எரிபொருள் செலவினங்களுடன் பயன்படுத்துகின்ற போதும் போதிய நீரை பெற முடியாத நிலையில் முழங் காவில் விவசாயிகள் தமது முயற்சிகளை மேற்கொண்டு வருவதையும் இங்கே குறிப்பிட வேண்டி இருக்கிறது.

பெரும்போக மழையும் அவ் வாறே சித்திரை மழையும் குறைவாக காணப்படும் வருடங்களில் ஆனி,ஆடி மாதங்களில் தரைக்கீழ் நீர் மட்டம் மிகவும் தாழ்ந்த நிலைக்கு செல்வதால் இந்த இயந்திரங்கள் மூலமாகவும் நீரை பெறமுடியாத நெருக்கடியை விவ சாயிகள் எதிர்கொள்வதும் இங்கே கவனத்துக்குரியது.

பிந்திய நிலமைகளில் முழங் காவில் கிழக்கு இராசபுரம் குடியிருப்பு பகுதி காணிக் கிணறுகளிலும் உவர்த் தன்மை கண்டறியப்பட்ட நிலையில் பாசன நிலங்களின் அளவை தொடர்ந்து விஸ்தரிக்க முடியாத ஒரு சூழலை முழங் காவில் விவசாயிகள் இப்போது எதிர் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் தமது பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தும் தரைக்கீழ் நீர் வளத்தை எவ்வாறாயினும் பாதுகாக்க வேண்டும் என்கிற ஒரு தேவை, நிர்ப் பந்தம் இப்பகுதி விவசாயிகளுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிறது.

இது குறித்து இப்பகுதியை சேர்ந்த பல்வேறு விவசாயிகளுடன் மேற்கொண்ட ஒரு கருத்துக்கணிப்பில் அங்கிருந்து சுமார் 8கிலோ மீற்றர் தொலைவில் மன்னார் வீதியை ஊடறுத்து கடலுக்கு செல்லும் பாலி ஆற்று நீரை முழங்காவில்லை அண்டியுள்ள குளங்களுக்கு திருப்புவதன் மூலம் தரைக்கீழ் நீர்வளத்தை பாதுகாக்க முடியும் என்ற தமது ஆலோசனையை முன்வைத்திருக்கிறார்கள்.


குறிப்பிடத்தக்க நீர்நிலைகளாக முழங்காவில் (தரவை) குளம், கதிராவில் குளம் என்பவற்றோடு அதனை அண் மித்ததாக அமைந்திருக்கும் பாரிய நீர்த்தேக்கமான கரியாலை நாகபடுவான் குளமும் இந்த பாலியாற்றின் நீரை பெறும் வாய்ப்பு கிட்டுமாயின் முழங்காவில் மேட்டுநில விவசாயிகள் மட்டுமன்றி நாகபடுவான் குளத்தின் கீழ் வரும் சுமார் 2000ஏக்கர் நெற்செய்கை நிலங்களும் போதிய நீர்ப்பாசன வசதியை பெறுவது சாத்தியமாகும் என்பதும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.


கூடவே இந்த குளத்திலிருந்து அரசின் குடிநீர் விநியோகத் திட்டத் துக்காக தெரிவாகி இருக்கும் குமழமுனை, நாச்சிக்குடா இரணைமாதாநகர், ஜெயபுரம், சோலை பல்லவராயன்கட்டு, ஆகிய பகுதிகளுக்கான நீர் விநியோகத் தையும் திறம்பட முன்னெடுப்பது சாத்திய மாகும் என்பதும் பிரதேச வாசிகளால் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது.

இதனை சம்பந்தப்பட்ட அதிகாரி களும் துறைசார் நிறுவனங்களும் கவனத்தி லெடுத்து உரிய காலத்தில் முழங்காவில் மேட்டுநில பயிர்ச்செய்கைக்கான நீர் வளத்தை பாதுகாக்க விரைந்து நட வடிக்கை எடுத்து உதவுமாறும் இப்பகுதி விவசாயிகள் விநயமாக வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள்.



# உழவன் மாத இதழ் வெளியீட்டு விழா





மேதினம் அல்லது தொழிலாளர் தினத்தன்று பிற்பகல் 4.30 மணியளவில் யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நம் உழவன் மாத இதழ் மிகச் சிறப்பாக வெளியீடு கண்டது.

SOLID நிறுவனத்தின் இயக்குனர் டாக்கர்.சிவயோகநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில்திரு.கணேசலிங்கம்(முன்னாள் பண்ணை முகாமையாளர் பயிற்சி) மற்றும் யாழ்மாவட்ட விதை உற்பத்தியாளர் சங்க (SEEDCO) பொது முகாமையாளர்திரு.ரவிமயூரன் சாவகச்சேரி பொது மருத்துவமனை டாக்டர். அல்பேட்குருஸ் ஆகியோரும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டனர்.

மேலும் விவசாய போதனா சிரியர்கள், விவசாய அமைப்பு பிரதிநிதிகள் விவசாய உள்ளீடுகள் வழங்கும் தனியார் நிறுவன பிரதிநிதிகள், தனியார் பண்ணை முகாமையாளர்கள் விவசாயிகள் மேலும் ஆர்வலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு விழாவுக்கு சிறப்புச் சேர்த்தனர். தலைமையுரையை டாக்டர் சிவயோகநாதனும் சஞ்சிகை அறிமுகத்தை திரு.ரவிமயூரனும் வாழ்த்துப் பாவை திரு.கணேசலிங்கமும் நன்றியுரையை டாக்டர் அல்பட்குருஸ் அவர்களும் நிகழ்திதனர்.

எமது முதலாவது உழவன் மாத இதழ் வெளியீட்டு விழாவுக்கு வருகை தந்து சிறப்பித்த அனைவருக்கும் அன்பையும், நன்றியையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடை கின்றோம். ஆ-ர்

# குடமியனில் ஒரு பல்



கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறை வீதியில் இரண்டு கிலோமீற்றர் தொலைவில் சுமார் ஐம்பது ஏக்கர் பரப்பளவு கொண்ட தென்னந்தோட்டத்தோடு கூடிய நந்தினி பல்நோக்குப் பண்ணை அமைந்துள்ளது. முன்னர் "சப்றா" என்ற நிறுவனத்தின் தோட்டமாக இருந்த இப் பண்ணை தற்போது குடமியனைச் சேர்ந்த திரு.திருமதி குணசபாநாதன் நந்தினி ஆகியோரின் சொந்தமாக உள்ளது.

புலம் பெயர்ந்த தழிரான குணசபாநாதன் நோர்வே நாட்டில் குடியுரிமை பெற்றவர் சுமார் 2500 தென்னை மரங்களைக் கொண்ட இப் பண்ணையில் ஊடுபயிராக பூசணி, அன்னாசி, பழமரங்கள், போன்றவற்றையும் குறிப்பிட்டளவு ஆடு, மாடு வளர்ப்பும் உள்ளது. இளம் தென்னைகள் நடுகை செய்யப்பட்டிருக்கும் இடங்களில் மரக்கறிச் செய்கை காலத்திற்கு ஏற்றவாறு செய்கை பண்ணப்படுகின்றது.

சுமார் 2000 தென்னைகளில் 45 நாட்களுக்கு ஒரு தடவை தேங்காய் வெட்டப்படுகின்றது தற்போது 15000 தொடக்கம் 20000 வரையான தேங்காய் கிடைக்கின்றது. அடுத்த மாதங்களில் 300000 தேங்காய்கள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுவதாக உரிமையாளர் குணசபாநாதன் கூறினார்.

வரட்சியான காலத்தில் தென்னை மரங்களுக்கு தண்ணீர் இறைப்பதற்காக 4குழாய் கிணறுகளும் 3 சாதரண கிணறு களும் 2ஏக்கர் பரப்பளவு கொண்ட பாரிய குளம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. அந்தக் குளத்தின் தண்ணீர் வருடம் முழுவதும் இருப்பதனை உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளது.

சுமார் 35 லட்சம் ரூபாய் செலவில் தோண்டப்பட்ட இக் குளம் முக்கிய மூன்று நோக்கங்கள் கொண்டது வருடம் முழுவதும் தென்னைக்குத் தேவையான நீர் இறைத்தலை உறுதிப்படுத்தல், நன்னீர் மீன் வளர்ப்பு, மீன் வளர்ப்பதன் மூலம் மீன் கழிவுகளால் உர மூட்டப்படும் குளத்து நீரை மரக்கறி செய்கைக்கும் தென்னைக்கும் பயன் படுத்துதல் மூலம் அதிக விளைச்சலைப் பெறுதல் ஆகியன குறிப்பிடத்தக்கது

பெரிய தென்னைகளில் இடைவெளி களில் நீர்த்துப் பூசணி செய்கையும் தென்னம் பிள்ளைகளின் இடைவெளியில் மரக்கறிச் செய்கையும் செய்யப்படுகிறது.

இவை போக ஆடு, மாடு முயல், தாரா, வான் கோழி போன்ற விலங்குவேள்ாண்மையும் சிறிதளவில் மேற்கொள்ளப்படுகின்றது.

**"எதிர் காலத்தில் 20 நல்லின பசுக்கள் வளர்ப்பது 50 உள்ளூர் இனமான ஊர் ஆடுகள் வளர்ப்பதும் பெரியளவில் ஒரு பன்றிப் பண்ணையை ஆரம்பிப்பதற்குமான வேலைத் திட்டங்கள் நகர்த்தப்படுகின்றன."**

இந்த நந்தினி பல்நோக்குப் பண்ணையில் சுமாரர் 15 தொழிலாளர்கள் முழுநேர தொழிலாளிகளாகவும் தேவைக்கேற்ப சில பகுதிநேர தொழிலாளர்களும் வேலை செய்கிறார்கள் தொழிலாளர்கள் இப் பண்ணையை அண்டியுள்ள கிராமங்களில் இருந்து வருகிறார்கள்.

# ல்நோக்கு பண்ணை

கடந்த இரண்டு வருடங்களாக யாழ் மாவட்டத்திற்கான தென்னை நாற்றுக்கள் இப் பண்ணையில் இருந்தே உற்பத்தி செய்யப்பட்டது. தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் அமைச்சர் புஸ்பகுமார இப் பண்ணைக்கு வருகைதந்து தென்னை நாற்று மேடையை ஆராம்பித்து வைத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தேவையான தண்ணீர் , மின்சாரம், வளமான நிலம், நிரந்தரமாக வருமானம் தந்து கொண்டிருக்கும் தென்னைகள் இவை அனைத்தும் இருந்தும் இன்னும் சிறப்பாக இப் பண்ணையை நடாத்துவதற்குரிய நிதிப்பற்றாக்குறை நிலவுவதாக உரிமையாளர் குணசபாநாதன் ஆதங்கப்பட்டார்.

அரசாங்கம் நீண்ட கால கடன் அடிப்படையில் நிதி உதவி செய்யுமிடத்து இப்பண்ணையை மிகச் சிறப்பாக நடாத்த முடியுமென்ற குணசபாநாதன், தற்போது தனது பண்ணையில் முகாமையாளராக கடமையாற்றும் லெம்பட் என்பவரை அறிமுகப்படுத்தி இவர் மூலம் பலவகையான திட்டங்களை தொடங்க இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

பண்ணை முகாமையாளர் லெம்பட் மாலைதீவு, இந்தியா, மலேசியா போன்ற நாடுகளில் விவசாயம், கால்நடை இயற்கை விவசாயம் உட்பட பல்வேறு தொழில் நுட்பங்களை அனுபவரீதியாக கற்றல் மட்டுமல்ல பெரியளவில் பண்ணைத் தொழிலில் ஈடுபட்டவர் நிர்வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புலம் பெயர்ந்த தமிழர்கள் தற்போது பளை, சண்லிப்பாய், தெல்லிப்பளை, விளான், இயக்கச்சி போன்ற இடங்களில் பெரும் எடுப்பில் பண்ணைகளை ஆரம்பித்தாலும் அவையாவும் சரியான முன் அனுபவமோ, திட்டமிடலோ இல்லாத வீண்விரயமான செலவாகத்தான் நோக்கப்படுகிறது. அந்த வகையில் புலம்பெயர்ந்த வரான குண சபாநாதன் நந்தினி பல்நோக்கு பண்ணை ஓரளவு சிறப்பாக உள்ளது குறிப்பிடத்தக்கது.









# பிறவுண்ஸ் கம்பனியின் உள்ளீடுகள் விற்பனை
## பற்றிய பயிற்சிப் பட்டறையும் பண்ணையாளர் ஒன்று கூடலும்







பிறவுன்ஸ் கம்பனியின் யாழ் மாவட்ட விற்பனை விநியோகத்தரான சி.தம்பிப்பிள்ளை அன்.கோவின் அனுசரணையுடன் மேற்படி நிகழ்வு மானிப்பாய் வீதியிலுள்ள "பிள்ளையார் இன்" என்ற விடுதியில் நடை பெற்றது.(ZAGRO) "சக்றோ" சிங்கப்பூர் கம்பனியின் கால் நடைகளுக்கான மருந்து வகைகளை அறிமுகப்படுத்துவதும், அவற்றின் செயற்பாடுகள் பற்றியும் விளக்கம் தரும் நிகழ்வாகவே இந்நிகழ்வு அமைந்திருந்தது.

யாழ் மாவட்ட பண்ணை உரிமையாளர்கள் பண்ணை முகாமையாளர்கள் ஆர்வலர்கள் உட்பட சுமார் 50 பேர் இந்நிகழ்வில கலந்து கொண்டிருந்தனர். பிறவுன்ஸ் கம்பனியின் விற்பனை விஸ்தரிப்பு உத்தியோகத்தர் திரு. எஸ். ஜசிகரனின் நிகழ்ச்சித் தொகுப்புடன் சிறப்பாக நடைபெற்ற இப்பயிற்சி பட்டறையில் முக்கிய பிரமுகராக "சக்றோ" சிங்கப்பூர் கம்பனியின் மிருக சுகாதாரத்திற்கான இலங்கை மற்றும் பங்களாதேஸ் நாடுகளுக்கான முகாகையாளர் திரு. சாந்திலால் மெண்டிஸ் கலந்து கொண்டிருந்தார்.

யாழ் மாவட்டத்திலுள்ள கோழிப்பண்ணைகளில் ஏற்படும் நோய்கள் பற்றியும் அதற்கான தீர்வு பற்றியும் தெல்லிப்பழை கால்நடை வைத்தியர் திரு. லஹிரு அவர்கள் விளக்கமளித்தார். சிங்களவரான இவர் அரைகுறை தமிழில் விளக்கமளித்தாலும் அனைவருக்கும் விளங்கும்படியாக விளக்கமளித்தது பாராட்டத்தக்கது.பங்கு பற்றிய கோழிப்பண்ணையாளர்கள் கோழி வளர்ப்பில் தாம் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் சந்தேகங்கள் பற்றியும் வெளிப்படையான கேள்விகளை கேட்டு திருப்திகரமாக விளக்கங்களை பெற்றுக் கொண்டதை அவதானிக்க முடிந்தது.

யாழ் மாவட்டத்தில் கோழி வளர்ப்பில் உள்ள பிரச்சினைகள் பற்றி ஒரு களப் பரிசோதனை செய்து அதன் அடிப்படையில் மேற்படி பயிற்சி பட்டறை நடை பெற்றது பாரட்டத்தக்கது.



# குடாநாட்டின் பாலுணவு உற்பத்தித் தொழில் – ஓர் நோக்கு

"யாழ் மாவட்டத்தின் 15 பிரதேச செயலர் பிரிவுகளையும் உள்ளடக்கி நுகரப்படும் பாலின் அளவு குறித்த மதிப்பீட்டில் சுமார் 1 லட்சத்து 30ஆயிரம் லீற்றருக்கும் அதிக மான பால் நாளாந்தம் தேவை யாக இருப்பது கண்டறியப் பட் டுள்ளது."

*சா*தகமான காலநிலை, சூழல், வளவாய்ப்புக்கள், இருந்தும் குடாநாட்டு மக்களுக்கு தேவையான பாலுற்பத்தியை ஏன் உள்ளூரில் சீராக முன்னெடுக்கப்படவில்லை என்பது பாலுணவுகளை நுகர்வோரிடத்தில் மட்டுமன்றி இத்தொழிலில் ஈடுபட்டி ருக்கும் கால்நடை பண்ணை யாளர் தரப்பிலும் அக்கறைக்குரிய கேள்வி யாக எழுந்திருக்கிறது.

யாழ் மாவட்டத்தின் 15பிர தேச செயலர் பிரிவுகளையும் உள்ள டக்கி நுகரப்படும் பாலின் அளவு குறித்த மதிப்பீட்டில் சுமார் 1லட்சத்து 30ஆயிரம் லீற்றருக்கும் அதிகமான பால் நாளாந்தம் தேவை யாக இருப்பது கண்டறியப் பட் டுள்ளது.

இருந்தும் குடாநாடு தழுவி சராசரியாக 45ஆயிரம் லீற்றருக்கும் குறைவான பாலையே நாளாந்தம் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருப்பதும் உற்பத்தியாகும் பாலுற் பத்தி குறித்த மதிப்பீட்டில் தெரியவந் திருக்கிறது.

எனவே பாலுணவு உற்பத்திக் கான அனைத்து வளவாய்ப்புக்கள் இருந்தும் குடாநாட்டு மக்கள் ஏன் தமக்கு தேவையான பாலை உற்பத்தி செய்ய முடியாமல் இருக்கிறார்கள் என்பது இவ்விடத்தில் அக்கறைக் குரிய கேள்வியாக இருக்கிறது.

இந்த விவகாரத்தில் பண்ணை யாளர்கள் நாளாந்தம் உற்பத்தி செய்யும் தமது பாலை உடன் இலகு வாக நுகர்வோருக்கு விநியோகிப் பதற்கான நேரடி தொடர்பாடலை ஏற்படுத்திக் கொள்ள முடியாமல் இருப்பது பிரதான காரணியாக கண்டறியப்பட்டிருக்கிறது.

பெறப்படும் பாலை குறித்த சில மணி நேரங்களுக்குள் சந்தைப் படுத்த வேண்டி இருப்பதால் பாலுற் பத்திக்காக கொடுக்கப்படும் அதே முக்கியத்துவத்தை நேரடியாக நுகர்வோருக்கு விநியோகிப்பதிலும் பாலுற்பத்தியாளர்கள் கொண் டிருக்க வேண்டும் என்பதும் சுட்டிக் காட்டப் பட்டிருக்கிறது.

ஆனால் இந்த உற்பத்தியாகும் பாலை நேரடியாக நுகர்வோருக்கு எடுத்துச் செல்வதை கௌரவக் குறைவான ஒன்றாக நோக்கும் மனோ நிலை இந்த உற்பதியாளர்களிடத்தில் காணப்படுவதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

இது பற்றிய அவதானிப்பில் இந்த விநியோகத்தின் மூலம் கூடுதலான சம்பாத்தியத்தை பெறும் வாய்ப்பை கொண்டிருப்பவர்களில் பலர் தரமான பாலை நுகர்வோருக்கு வழங்க முடியாதவர்களாக அதாவது கலப்படமான ஒரு பால் விநியோ கஸ்தராக இருப்பதும் தெரிய வந்திருக் கிறது.

இவ்வாறான ஒரு சூழலில் பாலை பதப்படுத்தி நுகர்வதில் உள்ள சிரமங்களும் சேர்ந்து பால்மாவை நுகர்வுக்காக தேர்வு செய்யும் நிலைக்கு பாவனை யாளர் தள்ளப்பட்டிருப் பதும் சூழலில் உற்பத்தியாகும் பாலுக் கான கேள்வியை மட்டுப்படுத் தியிருக்கிறது.

குடாநாட்டை பொறுத்தவரை கறவை இனங்கள் வளர்ப்பதை ஒரு குடும்பத்துக்கான முழு வருமானத்தையும் தரும் தொழிலாக மாற்றிக் கொள்வதற்குப் பதில் அதனை ஒரு துணை தொழிலாகவே அனேகமான பாலுற்பத்தியாளர்கள் கொண்டிருப்பதால் வேறு வருமான வாய்ப்புக்கள் கிட்டும் போது இந்த முயற்சியை கைவிடும் ஒரு நிலை காணப் படுவதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

இது பற்றிய அவதானிப்பில் விவசாயிகள் தமது பயிர்ச்செய்கை முயற்சிகள் நட்டத்தை எதிர்கொள்ளும் போது ஒரு தற்காலிக முயற்சியாகவே பால் மாடுவளர்ப்பை தொடர்வதும் பின்னர் பயிர்த்தொழில் சாதகமாக அமையும் போது பாலுற்பத்தி மீதான அக்கறை மட்டுப்படுவதும் பொது வான போக்காக இருக்கிறது.

**" எனவே பொருத்தமான இடங் களுக்கு பாலுணவு உற்பத்திக்கான சாதனங்களை இடம் மாற்றுவதன் மூலம் உள்ளூரில் உற்பத்தியாகும் பாலுக்கான கேள்வியை அதிகரித்து பாற் பண்ணை யாளர்களை ஊக்குவிக்க முடியும் "**

பாலுற்பத்தி சார்ந்த ஏனைய உற்பத்தி முயற்சிகளில் இங்குள்ள சிறு பண்ணையாளர்களை பொறுத்தவரை கால்நடை மூலமான உயிர்வாயு உற்பத்தி, கூட்டெரு தயாரித்தல், உற்பத்தியாகும் பாலை பாற்பொருட்களாக மாற்றுவதற்கான முயற்சிகளில் கவனம் செலுத்துவது மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே இருக்கின்றன

மாவட்ட மட்டத்தில் பாலை பொதிசெய்து விநியோகித்தல், மற்றும் ஏனைய பாற்பொருள் உற்பத்திகளின் நிலை குறித்த அவதானிப்பில் கணிசமான அரச சார்பற்ற நிறுவனங் களின் உதவிகள் குடாநாட்டு முயற்சியாளர்களுக்கு கிடைத்துள்ள போதும் கூடுதலாக பாலுற்பத் தியாகும் இடங்களுக்கு அந்த தொழில் நுட்ப சாதனங்கள் சென்றடைவதற்குப் பதிலாக பொருத்தமற்ற இடங்களுக்கு அவை விநியோகிக் கப்பட்டதில் அவை பயன்பாடற்ற நிலையில் இருந்து வருவதும் தெரியவந் துள்ளது.

எனவே பொருத்தமான இடங் களுக்கு பாலுணவு உற்பத்திக்கான சாதனங்களை இடம்மாற்றுவதன் மூலம் உள்ளூரில் உற்பத்தியாகும் பாலுக்கான கேள்வியை அதிகரித்து பாற் பண்ணை யாளர்களை ஊக்குவிக்க முடியும் என்றொரு கருத்தையும் இத்துறை சார்ந்த முயற்சியாளர்கள் சுட்டிக்காட்டியிருக் கிறார்கள்.

அனேகமான பண்ணையாளர் களுக்கு சாத்தியமற்ற ஒன்றாகவே இருக்கிறது. இதில் கால்நடை உத்தியோக த்தர்களின் ஆலோசனை வழி காட்டல்கள், அறிவுத்தல்கள், தேவை யான பயிற்சிகளை பெற்றுக்கொள் ளுதல் என்பதில் இவை வெறுமனே அறிக்கைப் படுத்தல் நிலையில் காணப்படுகின்றனவே தவிர அவை முயற்சியாளரை நோக்கி செயலுருப் பெறுவதாக அமையவில்லை. என்பதையும் குறிப்பிட வேண்டும்.







# "சுண்டங்காய் கால் பணம் சுமை கூலி முக்கால் பணம்"

## உற்பத்திகளை ஏற்றி இறக்கவென இடைத்தரகர்களால் இருமடங்கு கட்டணம் அறவீடு முறைகேட்டை தவிர்க்க

# விவசாயிகள் வேண்டுகோள்.


விவசாய உற்பத்திகளை கொழும்புக்கு எடுத்து செல்லவென மாவட்ட மட்டத்தில் எவ்வித முன்னேற்பாடுகளும் இன்மையால் கொழும்பை நோக்கிய ஏற்றியிறக்கலின்போது மேலதிக கட்டண அறிவீடுகளால் பெரும் பாதிப்பை யாழ்மாவட்ட விவசாயிகள் எதிர்கொண்டுள்ளனர்.

இதற்கு முன்னர் இந்த உற்பத்திகளை சந்தைப்படுத்தலுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கும் போது இதில் தொடர்புபடும் விவசாயிகள் பாரவூர்தியொன்றை வாடகைக்கு அமர்த்தி அக்கட்டணத்தை தமககிடையில் பகிர்ந்து கொள்ளும் ஒரு நடைமுறையே வழக்கமாக இருந்து வந்திருக்கிறது.

ஆனால் இந்த பாரவூர்தியை வாடகைக்கு இப்போது அமர்த்திக் கொள்வதில் இடைத்தரர்கள் நுழைந்து கொள்வதால் இதற்காக ஏற்படும் செலவினத்துக்குப்பதில் இப்போது இருமடங்கு கட்டணத்தை தாம் செலுத்த வேண்டி இருப்பதாக வலிகாமம் கிழக்கு பிரதேச விவசாயிகள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

கொழும்புக்கு அனுப்பி வைக்கவென உற்பத்திகள் ஓரிடப்படுத்துவதில் ஒருவாகன உரிமை யாளரோ அன்றி ஒரு இடைத்தரகரோ தொடர்புபடும் போது கொழும்புக்கான பாரவூர்தியையும் வாடகைக்கு அமர்த்திக்கொள்ளும் சந்தர்ப்பம் அவருக்கு கிட்டுகிறது.

அவ்வாறு குறித்த தொகைக்கு வாகனத்தை வாடகைக்கு அமர்த்திக் கொண்ட பின் கொழும்புக்கான ஏற்றி இறக்கல் கூலியாக மூடை ஒன்றுக்கு கட்டணத்தை அறவிடும்போது இருமடங்கு தொகை அறிவிடப் படுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.



"யாழ்ப்பாணத்தில் வைத்து 250 முதல் 300 மூடைகள் வரை ஏற்றப்படும் ஒரு பாரவூர்திக்கான வாடகையாக 30 ஆயிரம் ரூபா கட்டணமாக இருக்கும் நிலையில் இதில் ஏற்றப் படும் மூடை ஒன்றுக்கு கொழும்பில் வைத்து தம்மிடம் 200ரூபா கட்டணம் அறிவிடப்படுவதாக வலி கிழக்கு விவசாயிகள் சம்மேளனத்தின் பிரதி நிதியொருவர் தெரிவித்தார்."

எரிபொருள் கட்டணங்கள் குறைக்கப்பட்டதன் பின்னரும் இக் கட்டண அறவீடு தொடர்ந்து அதிகரித்து செல்வதாகவும் இது அவசியம் மாற்றியமைக்கப்பட வேண்டு மெனவும் கொழும்புக்கு தமது உற்பத்திகளை சந்தைப் படுத்தலுக்காக அனுப்பிவரும் விவசாயிகள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

இதனைவிட கொழும்பு செல்லும் பாரவூர்தியிலிருந்து மூடைகளை குறித்த கொள்வனவு நிலையத்திற்கு கொண்டு செல்லவென மேலதிகமாக வண்டில் கூலியொன்றையும் செலுத்த வேண்டிய நிலைக்கு, விவசாயிகள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

பாரவூர்தி உரிமையாளர்களும் வண்டில் (கரத்தை) தொழிலாளர்களும் இணைந்து கொண்டு தமது உற்பத்திகளை ஏற்றிச்செல்லும் பாரவூர்திகளை நேரடியாக 4ஆம் குறுக்குத்தெரு கொள்வனவு நிலையம் முன் நிறுத்துவதற்கு பதில் இப்போது அவற்றை 500மீற்றர் தூரத்துக்கு அப்பாலுள்ள தரிப்பிடத்திலேயே நிறுத்தப்படுகிறது.

இந்த நிலையில் இந்த மரக்கறிகளை கொள்வனவு நிலையத்திற்குகொண்டு செல்லவென மூடை ஒன்றுக்கு 20முதல் 30ரூபா கட்டணத்தை வண்டில் (கரத்தை) கூலியாக மேலதிகமாக செலுத்த வேண்டி இருப்பதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பயிர்ச்செய்கையின்போது நோய்த்தாக்கம், உள்ளீடுகளுக்கான அதிகரித்த செலவினங்கள், மற்றும் சந்தை விலை வீழ்ச்சிகளால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த ஏற்றியிறக்கல் செலவினங்களும் கூடவே விவசாயிகளை பாதித்துள்ளதால் இதுவிடயத்தை யாழ யாழ்வட்ட விவசாயிகள் சம்மேளனம் தனது மேலான கவனத்திலெடுத்து கொழும்புக்கான சந்தைப்படுத்தலில் மேலதிக செலவினங்களை தவிடக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# இயற்கை முறையில்
## உற்பத்தியாகும் பாரம்பரிய
# நெல்லை அறிமுகப்படுத்த திட்டம்

இயற்கை முறைமையிலான உணவுப்பயிர்ச் செய்கையிலிலிருந்து விலகியமை, மற்றும் உணவுப் பழக்க வழக்கங்களை மாற்றியமைத் தமையால் தொற்றா நோய்களின் தாக்கத்துக்குள்ளாகும் மக்களின் எண் ணிக்கை அதிகரிப்பை கவனத்தில் கொண்டு பாரம்பரிய நெல்லை அறிமுகம் செய்ய கமத்தொழில் அமைச்சு நடவடிக்கை மேற்கொண் டுள்ளது.

பாரம்பரிய உற்பத்தி முறைமை யிலிருந்து விலகி தமது உற்பத்தி நடவடிக்கைகளுக்காக இரசாயன உள்ளீடுகளில் தங்கியிருக்கின்ற நிலை காரணமாகவே பல புதிய தொற்றா நோய்களை பொதுமக்கள் எதிர் கொள்வதாக வெளிநாட்டிலும் கூடவே உள்நாட்டிலும் மேற்கொண்ட ஆய்வுகளில் நிரூபணமாகியிருக்கிறது. மக்கள் எதிர்கொள்ளும் பாதிப்பை கவனத்திலெடுத்து இந்த பாரம்பரிய நெல்லை அறிமுகம் செய்வதன் ஒரு ஆரம்பமாக நச்சு இரசாயபதார்த்த தங்கள் எதனையும் பயன் படுத்தாது உற்பத்தியான பாரம்பரிய நெல்லை ஒரு கிலோ 90ரூபா வீதம் விவ சாயிகளுக்கு விநியோகிக்க கமத் தொழில் அமைச்சு தீர்மானித் துள்ளது.

இந்த அமைச்சின் கீழ் இயங்கும் ஹதஹித்த அதிகார சபை, உணவு ஊக்குவிப்பு சபை, மாவட்ட விவசாய திணைக்களம் என்பவற்றின் ஊடாக இந்த நெல்லை கொள்வனவு செய்து விவசாயிகளுக்கு பரவலாக விநியோகிக்க இருப்பதாகவும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித் திருக்கின்றன.

முன்னுரிமையாக சிறுநீரக நோய் கூடுதலாக காணப்படும் இடங்களில் ஒரு விவசாயிக்கு தலா 25 கிலோ வீதம் வழங்குவதற்கும் எஞ்சிய நெல்லை அரிசியாக்கி விநியோகிக் கவிருப்பதாகவும் அமைச்சு அதிகாரி யொருவர் தெரிவித்தார்.



# கடும் மழையால் சிறுபோக நெற்செய்கையாளர்கள் பாதிப்பு

சென்ற மாதம் பெய்த கடும் மழையால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்த சிறுபோக நெற்செய்கையாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த வருடம் பெரும் போகத்தில் பெய்த கடும் மழையை அடுத்து கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்த்தேக்கங்களான இரணை மடுக்குளம், அக்கரையான் குளம் உட்பட வன்னிபெருநிலப்பரப்பில் சிறுபோகத் துக்கான நீர்வளத்தை கொண்டுள்ள அனைத்துக் குளங்களும் பாசனத்துக்கென போதிய நீரை கொண்டிருந்தன.

அதற்கிணங்க இம்முறை சிறு போகத்துக்கென கூடுதலான நெற் செய்கை நிலங்களுக்கு நீரை விநியோகிக்க நீர்வளத்துறை அதிகாரிகளும் மாவட்ட விவசாய சம்மேளனங் களின் பிரதிநிதிகளும் ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தனர்.


குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் 14ஆயிரம் ஏக்கர் நிலத்துக்கும் முல்லைத்தீவில் 10ஆயிரத்து 237 ஏக்கர் நிலத்திலும் இம்முறை சிறுபோக நெற் செய்கைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன.

அனேகமாக அனைத்து நெற் செய்கை நிலங்களிலும் விதைப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ள நிலையில் அண்மையில் பெய்த கடும் மழையால் ஏறத்தாழ 50சதவீதமான வயல்நிலங்களில் விதைக்கப் பட்ட நெல் விதைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப் பட்டுள்ளன.

இந்த வெள்ள நீரை உடன டியாக வெளியேற்றுவதில் விவ சாயிகள் சிரமங்களை எதிர் கொண்டுள்ள நிலையில் இந்த நெல் விதைகள் வெள்ளத்தால் முளைதிறனை இழந்த நிலையில் அழிவடைந்துள்ளதாக நெற் செய்கையில் ஈடுபடும் கிளிநொச்சி ஸ்கந்தபுரம் விவசாயிகள் தெரிவித் துள்ளனர்.

இந்த மழை காரணமாக இம்முறை மிகுந்த எதிர்பார்ப்புடன் முன்னெடுக்கப்பட்ட சிறுபோக நெற்செய்கையில் எதிர்பார்த்த அறுவடையை பெற முடியாத நிலமையே காணப்படுவதாகவும் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.








**கேள்வி:**

***உழவன் மாத இதழில் கோழியவரை செய்கை பற்றி எழுதியிருக் கிறீர்கள் எனக்கு கொஞ்சம் கோழியவரை விதை தருவீர்களா?***

-குமார்-சாவகச்சேரி-

**பதில்:**

தாரளமாக தருகிறேன் எமது அலுவலகமுகவரியில் உள்ளது பெற்றுக் கொள்ளுங்கள்.

**கேள்வி:**

***உழவன் மாத சஞ்சிகையில் சந்தா தாரராக என்ன செய்ய வேண்டும்***

-பிரபா-முல்லைத்தீவு-

**பதில்:**

அடுத்த இதழில் அதாவது யூன் மாத இதழில் சந்தாதாரர் ஆவது பற்றி விபரம் பிரசுரிக்கப்படுகிறது.

**கேள்வி:**

***வடமாகாண விவசாய அமைச்சு அல்லது அமைச்சின் முக்கிய அதிகாரிகளின் வாழ்த்துச் செய்தியைப் பெற்று முதல் இதழில் பிரசுரித்திருக்காலாமே?***

-முத்து , புலோப்பளை-

**பதில்:**

அவர்களை அழைத்தும் அவர்கள் எம்மை கண்டுகொள்ளவில்லை.

**கேள்வி:**


***குடநாட்டு இளைஞர்கள் பற்றி?***

-விமலா, கொடிகாமம்-

**பதில்:**

ஏர்பிடிக்க வேண்டிய கைகளால் சாராய போத்தலை பிடிக்கிறார்கள், மண்வெட்டி பிடிக்க வேண்டிய கைகளால் அரிவாளைத் தூக்கித் திரிகின்றார்கள்.







# பறவைகளும் அடைகாக்கும் நாட்களும்

| | |
|---|---|
| **கோழி** | **:21 நாட்கள்** |
| **வான்கோழி** | **:28 நாட்கள்** |
| **கினிக்கோழி** | **:26-28 நாட்கள்** |
| **தாரா** | **:28 நாட்கள்** |
| **மஸ்கோவிதாரா** | **:35-37 நாட்கள்** |
| **காடை** | **:23-24 நாட்கள்** |
| **ஜப்பானியா காடை** | **:17-18 நாட்கள்** |
| **புறா** | **:16-20 நாட்கள்** |
| **மயில்** | **:22-24 நாட்கள்** |
| **கிளி** | **:18-20 நாட்கள்** |



# அதிசயம்

அதிசயம் அதிசயம்
அதிசயம் அதிசயம்
அதிசயம்



## ஒரு தேங்காயில் மூன்று தென்னைமரங்கள்

20000 தேங்காய் நாற்று மேடையில் ஒரே தேங்காயில் மட்டும் மூன்று முளையுடன் வளர்ந்துள்ளது. (குடமியன் பண்ணை)



# மட்டக்களப்பும் மரமுந்திரிகையும்

இவ்வருடம் மட்டக்களப்பு மாவட்டத்தில் 10.000 ஏக்கரில் மரமுந்திரிகை அறுவடை செய்யப்பட்டது. ஆராயம்பதி, ஏறவூர் செங்கல்லடி, பட்டிப்பளை, கிரான் போன்ற இடங்களில் மரமுந்திரிகைச் செய்கை அதிகமாகச் செய்யப்படுகிறது. காலநிலை மாற்றம் காரணமாக இம்முறை மரமுந்திரிகை பூக்கும் காலப்பகுதியில் ஒரு வகை நோய்த் தாக்கம் ஏற்பட்டதால் இவ்வருடம் விளைச்சல் அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

Helo Plotis எனப்படும் இந் நோய் நுளம்பு இனத்தை சேர்ந்த ஒருவகை பூச்சியால் ஏற்படுகின்றது. இப் பூச்சி பூவையும், பூவேடு சேர்ந்த தண்டுப் பகுதியையும் தாக்கி சாற்றை உறிஞ்சிக் குடித்துவிடுகின்றது இதனால் பூவும் தண்டும் கருகிவிடுகின்றன. இதனால் விளைச்சல் குறைந்து விடுகின்றன.

அடுத்து தண்டு துளைப்பான் என்ற வண்டுத் தாக்கமும் முந்திரிகை மரத்தை பாதிக்கிறது மரத்தைத் துளைக்கும் வண்டுகள் தம் முட்டைகளை மரத்தினுள் விட்டுவிடுவதனால் அம்முட்டைகள் புழுவாகி மரத்தையே சாகடித்துவிடும்.

தண்டு துளைப்பான் வண்டுகளால் பாதிக்கப்பட்ட இடத்தை, கூரிய ஆயுதம் கொண்டு வெட்டிப் புழுக்களை வெளியேற்றி விட்டு "மார்ஷல்" என்ற மருந்தை விசிறி விடலாம். மரத்தை வெட்டிய பகுதியின் மேல் எரிந்த ஒயிலையும் பூசலாம் தொடர்ந்து மூன்று மாதங்கள் பூச வேண்டும்.

"பயம் போமாகோ" இல் அமைந்துள்ள மரமுந்திரிகை ஆராய்ச்சி நிலையத்தில் புதிய மூன்று மரமுந்திரிகை இனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அவை wucc *19,20,21,* என அழைக்கப்படுகின்றன. இந்த இனங்கள் காலநிலை தாக்கங்களை தாங்கக்க கூடியதாகவும், அதிக உற்பத்தி தரக்கூடியதாகவும், நோய் எதிர்ப்பு சக்தி உள்ள இனங்களாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மரமுந்திரிகை நாற்றுக்கள் விதைமூலம் கிடைக்கும் நாற்றுக்கள் ஒரு ஏக்கருக்கு 40 நாற்றுக்கள் 35X35 இடைவெளியில் நடுகை செய்ய வேண்டும் ஒட்டு நாற்றுக்கள் 25X20 இடைவெளியில் ஏக்கருக்கு 80 நாற்றுக்களும் நடலாம்.

3 வருடத்தில் பயன் தரத் தொடங்கும் மரமுந்திரிகை நடுகை செய்து ஒரு வருடத்திற்கு நீர் இறைத்து பாதுகாப்புக் கொடுத்தல் அவசியம்.





ஒரு வருடத்தின் பின் எவ்வித பராமரிப்பும் இன்றி வளர்ந்து பயன்தரக்கூடியது.

விளைச்சலைப் பொறுத்த மட்டில், வருடம் ஒரு தடவை மட்டும் பயன்தரும் மரமுந்திரிகை, விதை மூலம் உற்பத்தியான மரங்களிலிருந்து ஒரு மரத்திற்கு 5-6 கிலோ விதைகளும் ஒட்டு மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மரங்களில் இருந்து 10கிலோ வரை விதைகளும் கிடைக்கும்.

ஒரு கிலோ மரமுந்திரிகைப் பருப்பு பெறுவதற்கு 5கிலோ விதை தேவைப்படும் தற்போது 1 கிலோ பருப்பு 2200 ரூபாவிற்கு விற்கப் படுகின்றது. முந்திரிகை விதையி லிருந்து பருப்பை முழுமையாக பெற நவீனமயமான உடைக்கும் இயந் திரங்கள் தற்போது கிடைக்கின்றன.

மரமுந்திரிகை விதையிலிந்து பருப்பை உடைக்கும் இயந்திரத்தின் விலை 1750000 ரூபா ஆகும். ஒன்று தொடக்கம் 10 ஏக்கர் மரமுந்திரிகை செய்பவர்களுக்கு அரசு மானியத் திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது. அவை இலவசமாக நாற்று வழங்கல், மூன்று வருடத்திற்கு இலவச கண் காணிப்பு, இலவச பசளை விநியோகம், ஒரு வருடத்திற்கு ஒரு ஏக்கருக்கு 9500 ரூபா வீதம் மூன்று வருடங்களுக்கு இலவச மானிய நிதி இவ்வளவு அரசு நலத்திட்டங்கள் மரமுந்திரிகை செய் கை யாளர்களுக்கு வழங்கப்படுகின்றது.

எந்த மரமும் வளராத நிலங் களில் மரமுந்திரிகை செழித்து வளரும் எனவே பயன்படாத நிலங்கள் எல்லா வற்றிலும் மரமுந்திரிகையைப்பயிரிடு வோம்.

**தொகுப்பு:சீலன்**
**தகவல்:பா.சசிகரன்**
உதவிப்பிராந்திய முகாமையாளர்
இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம்.
கிரான், மட்டக்களப்பு.
தொ.பே எண் 065 3668566

## உழவன் விளம்பரக் கட்டண விபரம்

| விபரம் | முழுப்பக்கம் | அரைப்பக்கம் |
|---|---|---|
| பின் அட்டைகலர் | 20.000/= | 10.000/= |
| பின் அட்டை உள் பக்கம் கலர் | 15.000/= | 7500/= |
| முன் அட்டை உள் பக்கம் கலர் | 20.000/= | 10.000/= |
| நடுப்பக்கத்தின் பின்,முன் பக்கம் கலர் | 12.000/= | 6.000/= |
| கறுப்பு வெள்ளை பக்கம் | 10.000/= | 5.000/= |






# நல்தோர் தோட்டம் அமைப்போம்

மாவடியூர், **செ.சிவதாஸ்**
(விவசாய போதனாசிரியர் நெடுங்கேணி)

நல்தொரு தோட்டம் அமைத்திடுவோம்
நலன் பேணும் செயலை செய்திடுவோம்

வீட்டில் ஒரு தோட்டம் அமைத்திடுவோம்
வினைகளற்ற நாசினியை தெளித்திடுவோம்
வீணான நேரத்தை மாற்றிடுவோம்
இல்லை என்ற வாதத்தை ஒழித்திடுவோம்

கூட்டும் குப்பையைச் சேர்த்திடுவோம்
கூட்டெரு முறையாய் ஆக்கிடுவோம்
மண் எங்கள் எதிர்காலம்
அதை நாளும் பேணி காத்திடுவோம்


அண்ணன் தம்பி கூடி உழைத்திடுவோம்
அயல் வீட்டைச் சேர்த்து வாழ்ந்திடுவோம்.
கூடிக்குலாவி மகிழ்ந்திடுவோம்
வாழ்வை வளமாய் ஆக்கிடுவோம்

இயற்கை எங்கள் இன்ப மயம்
அதைப் பேண நாளும் உழைத்திடுவோம்
செயற்கை நாசினி என்பது துன்ப மயம்
விழித்து நாளும் செயலாற்றிடுவோம்

பல பயிர் சேர்த்து ஆக்கிடுவோம்
அதில் கால்நடைசேர்த்து வளர்த்திடுவோம்
ஏற்ற இலாபம் அடைந்திடலாம்
வளத்தை என்றும் காத்திடலாம்.

தாய் நாடு எங்கள் உயிர் மூச்சு
தன்னிறைவு எங்கள் பலமாச்சு
விளைவு என்றும் உயர்ந்திடவே
ஒன்றாய் கூடி உழைத்திடுவோம்.





# அன்பார்ந்த மாணவச் செல்வங்களே



க.பொ.த.உயர்தரத்தில் விவசாய விஞ்ஞானத்தை ஒரு பாடமாக கற்று பரீட்சைக்கு தோற்ற இருக்கும் உங்களுக்கு தமிழ் மொழிமூலம் போதிய நூல்கள் இல்லாத குறையைநீக்கும் முகமாக "உழவன்" மாதாந்த சஞ்சிகையானது உ/த விவசாய விஞ்ஞானப்பிரிவு அரச பாடத் திட்டத்திற்கு அமைவாக ஆக்கங்கள் பல வற்றை தாங்கி வருகின்றது.

கடந்தகால வினாக்களையும், எதிர் பார்க்கப்படும் வினாக்களையும் மையமாகக் கொண்டு வரவிருக்கும் ஆக்கங்கள் மாணவர் கள் பலர் இடர்படும் விடயங்களை இலகுவாக விளக்குவதோடு மாணவர் களுக்கான அரிய பல விவசாய செய்தி களையும் துணுக்குக்களையும் வழங் கவுள்ளது. எனவே இதனைப் படித்து பயன டைந்து பரீட்சையில் நல்ல பெறுபேற்றை அடைய வாழ்த்தி நிற்கின்றோம்.

## இலங்கையின் விவசாய வரலாறும் அபிவிருத்தியும்

தொழில்களை பிறப்பிக்கதக்க துறையாகவுள்ள விவசாயத்துறையானது இலங்கையில் எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்பதற்கான போதிய சான்றுகள் காணப்படாத போதிலும் கி.மு 6ம் நூற்றாண்டளவில் அதாவது விஜயனின் வருகையின் பின்னர் நெற்செய்கை அதனோடு இணைந்த விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றது.

65610 சதுர கீலோமீற்றர் பரப்பளவாக கொண்ட இலங்கைத்தீவில் வாழும் மக்களுள் 70 சதவீதமானோர் விவசாயத்தை நம்பி கிராமப் புறங்களில் வசித்து வருகின்றனர்.

எனினும் அண்மைக்காலங்களில் விவசாயத்துறையில் ஈடுபடுவோரின் கணிசமமான அதிகரிப்பு காணப்படாமைக்காக பின்வரும் காரணங்களைக் கூறலாம்.





1) பயிர்செய் நிலப்பரப்பு குறைவடைந்து செல்லுதல்
2) கைத்தொழில், சேவைத்துறை போன்றவற்றின் விருத்தியால் அத்துறையின் பால் இளைஞர்கள் கவரப்படல்
3) விவசாயத்துறையில் புதிதாக ஏற்பட்டுள்ள சவால்கள்.

எனினும் விவசாயம் சார் கைத்தொழில்களின் உறுதிப்பாடு, விவசாயத்தின் மூலம் மீதப்படுத்தப்படும் அந்நியச்செலவாணி, ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும்போது விவசாயத்துறையை பாதுகாத்து மேம்படுத்துவது காலத்தின் தேவையாகும்.

இலங்கையின் மொத்த தேசியவருமானத்தில் விவசாயம், சேவை, கைத்தொழில் போன்ற துறைகள் முக்கியத்துவம் பெறுகின்றன சில சகாப்தங்களுக்கு முன் ஏனைய துறைகளை விட மொத்த தேசிய உற்பத்திக்கு அதிகபங்களிப்பை செய்து வந்த விவசாயத்துறையானது சமகாலத்தில் அதன் பங்களிப்பானது கணிசமமான அளவு குறைவடைந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக வுள்ளது.

மத்தியவங்கியின் ஆண்டறிக்கையின்படி ( நடைமுறை விலைகளில் மில்லியன் ரூபாக்களில் )

| **விபரம்** | **2010** | **2011** | **2012** |
|---|---|---|---|
| விவசாயம் | *717,910* | *791,115* | *837,883* |
| கைத்தொழில் | *1,649,268* | *1,956,615* | *2,387,659* |
| சேவை | *3,236,926* | *3,794,893* | *4,356,834* |

இத் தரவுகளின் அடிப்படையில் விவசாயத்துறையில் கணிசமான அதிகரிப்பு ஆண்டுரீதியாக ஏற்பட்டுள்ள போதிலும் ஏனைய துறைகளின் பங்களிப்போடு ஒப்பிடுகையில் விவசாயத்துறையின் பங்களிப்பு மொத்ததேசிய உற்பத்திக்கு குறைவாக உள்ளதாக அவதானிக்க முடிகிறது.

## விவசாயத்துறைசார் வகுதிகள்

மொத்த தேசிய உற்பத்திக்கு பங்களிப்புச் செய்யும் விவசாயத்துறையில் பல்வேறு துறைசார் வகுதிகள் காணப்படுகின்றன. அவற்றில் முதன்மை பங்களிப்பைச் செய்யும் வகுதிகளாக பின்வருவன காணப்படுகின்றன.

பயிர்ச்செய்கை
விலங்குவளர்ப்பு
மீன்பிடித்தொழில்
வனவளங்கள்

இவற்றுள் கால் நடை உற்பத்தித்துறையும், மீன்பிடி உற்பத்தித்துறையும் மொத்த தேசிய உற்பத்திக்கு செய்யும் பங்களிப்பானது சமகாலத்தில் ஏனை வகுதிகளைவிட உயர்வாகக் காணப்படுகின்றது.





மேலும் இலங்கையில் செய்கை பண்ணப்படும் பிரதான ஏற்றுமதிப் பயிர்களான தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் சிறு ஏற்றுமதிப்பயிர்களின் மொத்தத் தேசிய உற்பத்தியும், செய்கை பண்ணப்படும் பரப்பளவும் கடந்த காலங்களில் மாற்றமடைந்து வந்துள்ளது.

உதாரணமாக 2008இல்
தென்னை 400 ஆயிரம் ஹெக்ரயரும் தேயிலை 222 ஆயிரம் ஹெக்ரயரும் றப்பர் 122 ஆயிரம் ஹெக்ரயரும் செய்கைபண்ணப்பட்டுள்ளது இவற்றின்படி தேயிலை,றப்பரை விட தென்னைச் செய்கை மேற்கொள்ளப்படும் நிலப்பரப்பு உயர்வாக உள்ளதனை அவதானிக்கலாம் எனினும் சிறு ஏற்றுமதிப் பொருட்களான

வெட்டுமலர்கள். (Cut Flower) காய்கறிவகை, மரமுந்திரிகை,பழவகை, சுவை சரக்குவகை போன்றவற்றின் மூலம் கிடைக்கும் அன்னியச்செலவாணி சம்பாத்தியம் கடந்தகாலங்களைவிட சற்று உயர்வடைந்து வந்துள்ளது.

வேலைவாய்ப்பை வழங்கும் துறைகளில் சேவைத்துறையானது முதன்மைத்துறையாக காணப்படுவதோடு மொத்த வேலை வாய்ப்புத் தேவையில் 43சதவீதம் பங்களிப்பைச் செய்யும் துறையாக காணப்படுகின்றது.

## இறக்குமதிகளும் அவற்றுக்கான பிரதியீட்டுப்பவை உற்பத்திகளும்

ஒரு நாடு உற்பத்தி செய்யும் பண்டங்கள் அந் நாட்டு மக்களின் நுகர்வுக்குப் போதுமானதாக காணப்படாதவிடத்து பண்டங்களை இறக்குமதி செய்யவேண்டிய கட்டாயத்துக்கு தள்ளப்படுகின்றது. இலங்கையானது அரிசி,சீனி.கோதுமைமா,பசளைவகை ,பால்மா, கடலுணவு போன்றவற்றை ஆண்டாண்டு தோறும் இறக்குமதி செய்யவேண்டிய கட்டாயத்துக்கத் தள்ளப்படுகின்றது. இதனால் நாட்டில் இருந்து அதிகளவு பணம் ஆண்டுதோறும் வெளியேற்றப்படுகின்றது.

மேலும் சுற்றுலா ஹோட்டலுக்குத் தேவையான சில விவசாய உற்பத்திப் பொருட்களில் ஆண்டுதோறும் இறக்குமதி செய்யப்படுகின்ற பேரீச்சம்பழம், மைசூர்பருப்பு, தக்காளிசூழ், இனிப்பு முள்ளங்கி போன்றவற்றிற்கு பதிலாக உள்ளூரில் உற்பத்தி செய்யப்படக்கூடிய பிரதியீட்டுப் பண்டங்களை உற்பத்தி செய்து பயன்படுத்துவதன் மூலம் இழக்கப்படுகின்ற அந்நியச்செலாவணியின் அளவைக்குறைத்துக் கொள்ளலாம்.

**உணவுக்காப்பு**

தேவையான சந்தர்ப்பத்தில் தேவையான அளவுகளில் குறித்த தரத்தைக் கொண்ட உணவுவகைகளை பெற்றுக்கொள்வதற்கான ஆற்றலே உணவுக்காப்பு எனப்படும் நாட்டின் அபிவிருத்திக்கு காரணமாக அமையும் உணவுக்காப்பை

1) பிரதான உணவுப்பயிர்களின் உற்பத்தியை நாட்டினுள் அதிகரித்தல்
2) பிரதான உணவுப்பயிருக்கு பிரதியீடாக பயன்படுத்தத்தக்க சுதேச உணவுப்பயிர்களின் உற்பத்தியை அதிகரித்தல்





3) புரதம் செறிந்த தாவரம் மற்றும் விலங்குணவுற்பத்தியை மேம்படுத்தல்
4) அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பத்தை மேம்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் நாட்டுமக்களின் உணவுக் காப்பை மேம்படுத்தலாம்.

## விவசாயம் சார்ந்த கைத்தொழில்கள்

தற்போது நமது நாட்டில் விவசாயத்துறையை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வகையான கைத்தொழில்கள் உருவாக்க நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன அவை

1) விவசாய உள்ளீடுகளை உற்பத்தி செய்யும் கைத்தொழில்கள்
(பசளை, பொறிகள், விவசாய இரசாயனங்கள்)
2) உணவுக் கைத்தொழில்
(பிஸ்கட், பாண், யோக்கற், அரிசி பதனிடல் ,விவசாய உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்த்தல்
3) விவசாய கட்டுமானக் கைத்தொழில்
(பண்ணைக் கட்டடங்கள், விலங்குமனைகள், குளம், நீர்ப்பாசனத் திட்டங்கள்)
4) விலங்குணவு உற்பத்திக் கைத்தொழில்
(விலங்குத் தீன் உற்பத்திகள்)

### விவசாயம் சார்ந்த சேவைகள்

1) விவசாயம் மதியுரை சேவைகள்
2) விவசாய ஆராய்ச்சி சேவைகள்
3) போக்குவரத்துச் சேவைகள்
4) பராமரிப்புச் சேவைகள்
5) விவசாயக் கடன் காப்புறுதிச் சேவைகள்
6) விவசாய உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்தல் சேவைகள்
7) பயிற்சி பெற்ற ஊழியர்களை வழங்கும் சேவைகள்

**கடந்த கால வினாக்கள்**

**2013 A/L பகுதி A**

**வினா இல: 06** (ii)
பின்வரும் கூற்றுப்பற்றி உங்கள் கருத்துக்களை எழுதுக.
விவசாய அபிவிருத்தியுடன் விவசாய துறைக்குத் தொடர்புள்ள சேவைகளில் அதிக வாய்ப்புக்கள் உள்ளன.

**விடை**
அறிமுகப்படுத்தல் - விவசாயத்துறை அபிவிருத்தியானது அதனுடன் தொடர்பான கைத்தொழில் சேவைத்துறை அபிவிருத்திக்கு வழிவகுக்கும்
(5 புள்ளிகள்)
விவசாயம் சார்ந்த சேவைகள் ஐந்தைக் குறிப்பிட்டு விளக்க வேண்டும்.
(5X9 =45 புள்ளிகள்)

**வளரும்.....**





# உழவன் சந்தை—வாங்கலாம் விற்கலாம்

**வாசகவிவசாயிகளே!**

விவசாய விளைபொருட்கள், கால் நடைகள் போன்றவற்றை சந்தைப்படுத்த (வாங்க அல்லது விற்க) இந்தப் பகுதியில் இலவசமாக விளம்பரம் தரப்படும். சிறியளவிலான உற்பத்தி அல்லது தொழில்முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மட்டுமான விற்றல் - வாங்கல் தொடர்பினை ஏற்படுத்தும் நோக்கில் இந்த இலவச விளம்பர சேவை வழங்கப்படுகின்றது. அதே நேரம் பொருட்களின் விலை, தரம் போன்றவற்றிற்கு "உழவன்" பொறுப்புக்குரியது அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

பெயர், தொலைபேசி இலக்கம், விற்றல் அல்லது வாங்கல் பொருட்களைக் குறிப்பிட்டு கீழ்க்கண்ட முகவரிக்கு தபால் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:** "உழவன் சந்தை"
குடமியன், வரணி.

**மின்னஞ்சல்:** ullavan15@gmail.com

| தேவை | இடம் | தொடர்பு எண் |
|---|---|---|
| நல்ல இன பன்றி குட்டிகள் தேவை | கொடிகாமம் | 0712404200 |
| 8-10 போத்தல் பால் தரக்கூடிய பசுக்கள் | கிளிநொச்சி | 0772046803 |

| விற்பனைக்கு | இடம் | தொடர்பு எண் |
|---|---|---|
| மஸ்கோவி தாரக் குஞ்சுகள், புறா, வெள்ளடியன், ஊர்க் கோழி | முழங்காவில் | 07778949956 |
| தென்னை நாற்றுக்கள் | குடமியன் | 0712404200 |
| பசு மாடுகள் மூன்று | முழங்காவில் | 07778949956 |

## உழவன் இதழ் தொடர்ந்து பெற இன்றே சந்தாதரராகுங்கள்

**சந்தா விபரம்**

☐ அரை வருடத்திற்கு 420 ரூபா ☐ ஒரு வருடத்திற்கு 840 ரூபா

சந்தா செலுத்துபவர் பெயர்: -..............................................................

முகவரி: -..............................................................

தொ.பே.எண்:..............................................................

..........................................

கையொப்பம்



# உழவன் வாசகர் கடிதம்

**உழவன் ஆசிரியருக்கு!**

கவர்சிகரமான அட்டைப்படங்களுடன் பல விவசாயத்தகவல்களை உள்ளடக்கி வெளிவந்திருக்கும் உழவன் மாத இதழுக்கு முதலில் எனது வாழ்த்துக்கள். பயனுள்ள இந்த உழவன் மாத இதழ் ஒவ்வொரு மாதமும் சிறப்பாக வெளிவரவும் நம் விவசாயப்பெருமக்கள் பயனடையவும் மீண்டும் மீண்டும் வாழ்த்துக் கூறிக்கொள்கிறோம்.

நன்றி

இப்படிக்கு
அரியமலர் ,மிருசுவில்.

**உழவன் ஆசிரியருக்கு வணக்கம்**

குறிப்பாக தென்னை மேலே பூசணி கிழே என்ற தலைப்பினைக் கொண்ட ஆக்கம் சாதாரண விவசாயிகளுக்கு விளங்கக் கூடியதாக எளிய தமிழில் எழுதப் பட்டிருக்கின்றது.

மேலும் கோழிவளர்ப்பில் எது முக்கியமானதோ அதை நீங்கள் வெளியிட்டிருப்பதால் முதலாவது உழவன் சஞ்சிகை பாதுகாத்து வைக்கவேண்டிய அவசியம் வந்துவிட்டது.

பால் மாடு வளர்ப்பு பற்றி நீங்கள் விளக்கும் போது பாலை தயிராக்குவது “உறை” தயிரை மோராக்க பயன்படும் கருவி “மத்து” என்று கூறி இருந்தீர்கள் இவை எல்லாம் எனக்குத் தெரியாத சொற்கள்-விடயங்கள்


பல பயனுள்ள விடயங்களுடன் “உழவன்” தொடர்ந்து வர வாழ்த்துக்கள்

இப்படிக்கு அன்புடன்
ம.சாளினி,நெடுங்கேணி.


## உழவன் மாத இதழ் கிடைக்கும் இடங்கள்

| பெயர் | முகவரி | தொலைபேசி |
|---|---|---|
| சாந்தி அக்றோ நீட்ஸ் | பலாலி வீதி, திருநெல்வேலி. | 0778814228 |
| சி.தம்பிப்பிள்ளை அன்கோ | 343 கே.கே.எஸ் வீதி. யாழ்ப்பாணம். | 021 222 3353 |
| கதிர்வேளாண் | A9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி. | 021 2280007 |
| எஸ்.ஆர் அக்றோ சென்ரர் | இல, 22 சந்தை உட்வட்ட வீதி, வவுனியா. | 024 5684391 |
| காசி கெமிக்கல் | இல,28 சந்தை உள்வட்ட வீதி, வவுனியா. | 077 3768173 |
| வவுனியா வடக்கு ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையாளர் சங்கம் | விவசாய போதனாசிரியர் அலுவலகம், நெடுங்கேணி. | |





# கோழிகளுக்கு சொண்டு வெட்டுதல்



கோழிகள் ஒன்றுடன் ஒன்று சண்டையிடும் பழக்கம் கொண்டவை. சண்டையிடுதலின் போது ஒன்றை ஒன்று கொத்திக்காயப் படுத்தியும், சில வேளைகளில் காயப் பட்ட கோழியை பண்ணையில் உள்ள அனைத்துக் கோழிகளும் சேர்ந்து கொத்தி அழித்து விடுவதும் உண்டு.

தம் கூரான சொண்டுகளைக் கொண்டு இலகுவாக முட்டைகளைக் கொத்திக் குடித்துவிடுவதனால் பண்ணையாளர்களுக்கு பாரிய நட்டத்தை ஏற்படுத்திவிடும். கூரான வளைந்த சொண்டுகளுடன் உணவுப் பாத்திரங்களிலுள்ள உணவை உண்ணும் போது நிலத்தில் கொட்டி சிதறிச்சிந்துவதனால் உணவு அதிக சேதாரம் ஏற்படுகின்றது.

மேற்படி இழப்புகளைத் தவிர்ப்பதற்காகவே கோழிகளுக்கு சொண்டு வெட்டப்படுகின்றது.

இறைச்சிக் கோழிகளுக்கு சொண்டு வெட்ட வேண்டிய அவசியம் இல்லை. முட்டைக் கோழிகளுக்கே சொண்டு வெட்டப்படுகின்றது.

கோழிகளுக்கு 6-10 நாட்களுக்குள் குஞ்சுப் பருவத்திலேயே சொண்டு வெட்டப்படுவது சிறந்தது. குறைந்த இரத்த இழப்பும், மிக விரைவாகக் காயம் ஆறுதலும், குறைந்தளவு அதிர்ச்சி ஏற்படுவதுமான நன்மைகள் குஞ்சுப்பருவத்தில் சொண்டு வெட்டுவதனால் சாத்தியமாகிறது.



வடக்கின் கணனிப் பூங்கா


northern PC PARK PVT (Ltd)



அனைத்து வகையான கணனிகள் மற்றும் கணனி
உள்ளீடுகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

காட்சியறை 1:
இல, 269E, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.இல:021 222 0388

காட்சியறை 2:
இல, 10, முட்டாஸ்கடைச் சந்தி, ஸ்ரான்லி, வீதி யாழ்ப்பாணம்,
தொ.இல:021 222 2050




சத்தியா பிறிண்டேர்ஸ்,யாழ் T.P:0771386661